உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்


ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-161

மே 1-15 2023

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்




# ஏழுலகை வென்ற மதுரைப் பெண்ணும் மீனாட்சி திருக்கல்யாண வரலாறும்



# மீனாட்சி அம்மன் கோவில் பூஜை முறைகளை உருவாக்கிய நீலகண்ட தீட்சிதர்

உலகில் உள்ள அம்மன் கோவில்களில் மாறுபட்டு காணப்படுவது மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில், இத்திருத் தலத்தில்மட்டும்தான் அம்பாள் பல்வேறு கோலங்களில் அருள் பாலிப்பதாக ஐதீகம் உள்ளது.

திருவனந்தல், விளாபூஜை, காலசந்தி, திரிகாலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தஜாமம், பள்ளியறை பூஜை என தினமும் எட்டுகால பூஜை நடக்கிறது. இந்த எட்டுகாலங்களில் முறையே மஹாஷாடசி, புவனை, மாதங்கி, பஞ் சதசாட்சரி, பாலா, சியாமளா, சோடஷி ஆகிய திருக்கோலங்களில் அம்பிகையை பாவித்து வழிபடுவது இத் தலத்திற்கே உரிய ஒன்றாகும்.

இந்த பூஜைமுறைகளை திருமலை நாயக்கரின் அமைச்சரவையில் அமைச்சராகவும், மதுரை மீனாட்சியம்மனின் மிகச் சிறந்த பக்தராகவும் இருந்த நீலகண்ட தீட்சிதரால் உருவாக்கப்பட்டது.

நீலகண்ட தீட்சிதர் வகுத்து வைத்தபடி தற்போதும் மேற்கண்ட பூஜைமுறைகளில் வழிபாடு நடைபெற்று வருகிறது. இத்தலத்தில் காரண, காமிக ஆகமங்கள் பின்பற்றப்படுகின்றன.

# ஸ்ரீரங்கம் ரங்கநாதரின் கண்களை கொள்ளையடித்த கொள்ளையர்கள்

ஸ்ரீ ரங்கத்தில் வீற்றிருக்கும் ரங்கநாதரின் கண்களுக்கு அடிமையாகி, தீவிர பக்தர்களாக மாறிய வர்களும் உண்டு, அதற்கு மேலான ஆழ்வாராக மாறியவர்களும் உண்டு. ரங்கநாதரின் கண்கள் அவ்வளவு அழகாக இருக்குமாமம், இவ்வளவு சிறப்பு வாய்ந்த ரங்கநாதனின் திருக்கண்கள் விபீஷணனால் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்த கண்கள் விலை மதிப்பில்லாத வைரங்களால் ஆனவை.



ஆனால் காலக்கொடுமை பாரதத்தை கொள்ளையடிக்க வந்த கயவர்களால் அக்கண்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. கொள்ளை நடைபெற்ற பின் அரங்கநாதரின் பக்தர்களால் புதிதாக பொருத் தப்பட்ட கண்களுடன்தான் தற்போது ஸ்ரீரங்கநாதர் காட்சி தருவதாக கூறப்படுகிறது.

aanmeegamalar.com

# பிள்ளை வரம் தரும்
# புத்ரதா ஏகாதசி விரதம்

'மக' மாதம், வளர் பிறையில் (சுக்ல பட்சம்) வரக்கூடிய ஏகாதசியே "புத்ரதா ஏகாதசி" (Puthradha Ekadasi) என்று அழைக்கப்படுகின்றது.

புத்ரதா ஏகாதசி பற்றி 'பவிஷ்ய உத்தர புராண' விளக்கம்:

யுதிஷ்டிரர் ஒருமுறை, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் தனது சந்தேகத்தைக் கேட்கிறார்;பரம்பொருளே, கேசவா, மக மாதத்தில், சுக்லபட்சத்தில் வரக்கூடிய ஏகாதசியின் பெயரினையும், அதன் சிறப்புகளையும், தங்கள் மூலமாக அறிந்து கொள்ள விழைகிறோம்... பரந்தாமா, எங்களுக்கு அதன் பெருமைகளைக் கூறுங்கள் என்று, யுதிஷ்டிரர், ஸ்ரீ கிருஷ்ண பகவானை வேண்டுகிறார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், கூறுகையில், யுதிஷ்டிரா, புத்ரதா ஏகாதசி எனும் இந்த ஏகாதசியின் சிறப்புகளை உங்கள் ஐவருக்கும் சொல்கிறேன் கேளுங்கள் என்று கூறி தொடர்கிறார்...

முன்பொரு காலத்தில், பத்ராவதி எனும் அழகிய நகரை "சுகேத்துமன்" என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு "சைவியா" என்ற அழகான மனைவி உண்டு. அந்த ராஜ்யத்தை நல்ல முறையில் ஆண்டு வந்ததால் மக்களுக்கு எந்த குறையும் இல்லை. ஆனால் மன்னருக்கும், ராணிக்கும் பெரிய மனக்குறை இருந்தது, அது என்னவென்றால் அவர்களது ராஜ்யம் ஆள அடுத்து வாரிசு இல்லை என்பது தான்.

ஆம், மன்னருக்கு புத்ர பாக்யம் இல்லை என்பது ஒரு மிகப்பெரிய குறையாக இருந்தது. அவர் தனது முன்னோர்கள் தமக்கு அந்த ஆசியை வழங்கவில்லையே என்ற வருத்தத்தில் பல நாட்கள் இருந்தார். அவரது அரண்மனை வாழ்க்கை அவருக்கு பெரிய மகிழ்ச்சியை தர வில்லை.

இதனை நினைத்து அவர் பூஜைகள், யாகங்கள் செய்திருப்பினும் அதற்கு அவருக்கு பலன் இல்லாமலே இருந்தது. அதனால், மன நிம்மதி தேடி அவர் ஒரு வெண்குதிரை ஒன்றை எடுத்துக் கொண்டு அருகில் உள்ள கானகம் நோக்கி சென்றார்.

கானக சூழல் அமைதியாக இருந்ததாலும், மனதிற்கு ரம்யமாக இருந்ததாலும் கானகத்தில்



நீண்ட தொலைவு உள் நோக்கி பயணித்துவிட்டார். அருமையான பல வகை மரங்கள்,செடிகள், கொடிகள், கனிகளோடு காய்த்து குலுங்கும் நந்த வனம் போன்ற தோட்டத்தினைக் கடந்து சென்றார். அந்த இடத்தில் பல வேர்களைக்கொண்ட அரச மரம் இருந்த இடத்திற்கு வந்தார்.

அங்கு அருமையான ஏரி ஒன்று இருப்பதைக் கண்டார், அதனால் அந்த இடத்தில் நின்றார். சற்று அருகில் சென்று பார்க்கும் பொழுது அங்கு முனிவர்கள் போல் பலர் இருப்பதைக் கண்டார்.

அதனால், அவர்கள் அருகில் சென்று சிரம் தாழ்ந்து அவர்களுக்கு மரியாதையை செலுத்தி, தன்னை அந்த ராஜ்யத்தின் மன்னர் என அறிமுகம் செய்துகொண்டு அவர்களைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தான். முனிவர்களே, தாங்கள் எல்லாம் யார், இந்த இடத்திற்கு எதனால் வந்தீர்கள் என்று கேட்டான்.

அவர்களும், மன்னா நாங்கள் "விஸ்வாதி தேவர்கள்", புண்ய நாளான இன்று, ஸரோவர் போன்ற மங்களமான இந்த நீரில் நீராட வந்தோம் என்று கூறினார்கள். மேலும், அவர்கள் மன்னரே உமது முகம் மிகவும் சோகமாக உள்ளதே, அதற்கான காரணம் என்ன என்றும் கேட்டனர்?

மன்னரும், தமது புத்ர பாக்ய வேண்டுதலை அவர்களிடம் தெரிவித்தார்.

உடனே, அவர்கள் மன்னா, கவலை கொள்ள வேண் டாம், இன்று பகவான் ஸ்ரீ விஷ்ணுவிற்கு ப்ரியமான "புத்ரதா ஏகாதசி" தினம். அதன் காரணமாகவே விரதம் இருப்பதற்கு முன்பாக நாங்கள் இங்கு நீராட வந்தோம்.

நீங்கள் இன்று ஒரு நாள் உணவின்றி விரதம் இருங்கள், உங்களுக்கு புத்ர பாக்யம் உண்டாகும் என்று கூறினர்.

மன்னரோ, விரக்தியின் உச்சத்தில் இருந்ததனால், நான் ஏற்கனவே பல்வேறு பூஜைகள் மற்றும் யாகங்கள் செய்துவிட்டேன், எந்த பலனும் இல்லை, இந்த ஒரு நாள் விரதம் அந்த பலனை தந்து விடுமா என்று கேட்டார்.

அதற்கு, அவர்கள் நீங்கள் இந்த ஒருநாள் விரதம் இருந்து பகவான் ஸ்ரீ ஹரியை மனதார வேண்டுங்கள், உங்களது ப்ரார்த்தனை நிச்சயம் வெற்றியடையும் என்று கூறி வாழ்த்தினர்.

மன்னரும், சற்றே மனமகிழ்ந்து அவர்களுடன் சேர்ந்து நீராடிவிட்டு முழு விரதத்தையும் அனுஷ்டித்தார். இரவில் அவர்களுடன் சேர்ந்து பகவான் ஸ்ரீ ஹரியை நினைத்து பூஜை மற்றும் பஜனைகளில் ஈடுபட்டார். தனது விரதத்தை மிக ஸ்ரத்தையாக நிறைவு செய்துவிட்டு பின்னர் மறுநாள் அவர்களிடம் ஆசி வாங்கி சென்றார்.

பின்னர் அரண்மனை திரும்பிய சில நாட்களிலேயே ராணி "சைவியா" கருவுற்றார். மன்னரும் மிகவும் மகிழ்வுற்றார். பின்னர் முனிவர்கள் ஆசியால் மிக அழகான ஆண் குழந்தையை பெற்றுடுத்தார். மன்னர் ராஜ்யத்தை மேலும் மகிழ்வுடனும், சிறப்பாகவும் ஆண்டு மக்களுக்கு பல நல்லவற்றை செய்தார்.

இதனை, யுதிர்ஷ்ட மஹாராஜாவிடம் கூறிய ஸ்ரீ கிருஷ்ணர்;

எனதருமை யுதிர்ஷ்ட்ரா, மிகவும் சக்தி வாய்ந்த புத்ரதா ஏகாதசி விரதம் இருந்து ஒருவர் அனைத்து பாவங்களில் இருந்தும் விடுபட்டு வளமான வாழ்வை அடையலாம், என்றார். மேலும் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகையில், பாண்டவர்களே, என்னை மகிழ்விக்கும் இந்த ஏகாதசி விரதக் கதையினைப் படிப்பவர்களும், கேட்பவர்களும் பிறருக்கு எடுத்துக் கூறுபவர்களும் மிகுந்த புண்யத்தினை பெற்று இக வாழ்வில் அனைத்து செல்வங்களும் பெற்று பின்னர் பர வாழ்வில் முக்தி அடைகின்றனர் என்று கூறினார்.

இவ்வாறு "புத்ரதா ஏகாதசி" விரத மகிமை பற்றி "பவிஷ்ய உத்தர புராணம்"விளக்குகின்றது.



aanmeegamalar.com

# மந்திரங்களும்

# ஈடிணையற்ற சக்திகளும்



மந்திரங்களின் துணையால் உலகியல் இன்பங்களிலிருந்தும், உலகக் கவர்ச்சியிலிருந்தும் விடுபட்டு முக்தியையும் பெறலாம். உலகியல் பொருள்களையும், இன்பங்களையும் அடையலாம்.

மந்திரத்தால் இங்கிருந்தபடியே தேவர்களையும் அழைக்கலாம். வசீகரம் முதலிய சக்திகளையும் பெறலாம். மந்திரத்தால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும். உடம்பிலே பஞ்ச பூதங்களை வெல்லும் ஆற்றல் வாய்ந்த மையங்கள் உண்டு. மந்திர சித்தி பெற்றவன் கூடுவிட்டுக் கூடு பாயலாம். தண்ணீரில் மூழ்கிக் கிடக்கலாம். நினைத்த இடத்திற்குப் போகலாம். வரலாம். மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாமலே உலாவலாம்.

தேவர் உலகமும் சென்று வரலாம். ஏன்? ஒருவர்க்கு மரணத்தையும் உண்டாக்கலாம்.

மகாலட்சுமி மந்திரம் என ஒன்று உண்டு. இம்மந்திரம் செல்வத்தை அள்ளிக் கொடுப்பது. ஆனால் எல்லோர்க்கும் பலன் தருவது இல்லை. வறுமையில் வாடிய வித்யாரண்யர் இம்மந்திர ஜெபத்தால் வறுமையைப் போக்கிக் கொள்ள மகாலட்சுமி உபாசனையை மேற்கொண்டார். இறுதியில் மகாலட்சுமி அவருக்குக் காட்சி கொடுத்தாள்.

இந்தப் பிறவியில் உனக்குச் செல்வம் அளிக்க முடியாது. உன் பிராரத்துவ வினை இது. என்றாளாம். உடனே வித்யாரண்யர், பிறவியிலிருந்து தப்பிக்கக் குறுக்கு வழி ஒன்றை மேற் கொண்டார். சந்நி யாசம் வாங்கிக் கொண்டால் புதுப் பிறவி எடுப்பதற்குச் சமம். ஆகவே சந்நி யாசம் பெற்றுக் கொண்டார்.



மந்திர ஜெபத்துக்கான பலனைமகா லட்சுமி கொடுத்தாக வேண்டும் அல்லவா? உடனே அளவற்ற செல்வத்தை அள்ளிக் கொடுத்து விட்டாள்.

வித்யாரண்யருக்கு இப்போது புதிய தரும சங் கடம் வந்து விட்டது.

சந்நியாசியாகி விட்டபிறகு பணத்தைத் தொடக்கூடாது.

தாயே! இந்தச் செல்வத்தை வைத்து சந்நியாசி யாகிவிட்ட நான் என்ன செய்யப்போகிறேன் என்றாராம். என்ன செய்வாயோ தெரியாது. உனக்குக் கொடுத்து கொடுத்ததுதான் என்றா ளாம் மகாலட்சுமி.

வேறுவழியின்றி இந்து சாம்ராஜ்யத்தை – விஜய நகரப் பேரரசை நிறுவுவதற்காக அரிகரர் என்ற அரசர்கட்கு அந்தச் செல்வத்தை அப்படியே கொடுத்து விட்டாராம்.

நினைத்த காரியத்தில் வெற்றியைக் கொடுப் பது வராகி மந்திரம். ஏவல், பில்லி, சூன்யம் போன்ற தீமைகளை வலுவிழக்கச் செய்வது அஸ்வாரூடா மந்திரம்.

கர்ண பிசாசினி என்ற தேவதைக்குதிய மந்திரம் உண்டு. இம்மந்திர ஜெபம் சித்தியானால் அந்த உபாசகன் மற்றவர்கள் வாழ்வில் நடந்தவை நடக்க இருப்பவை, ஆகிய சம்பவங்களைத் தெரிந்து சொல்ல முடியும்.

ஆவஹந்தி தேவதை என்ற ஒரு தேவதை உண்டு. அவள் மந்திரததை உள்ளன்போடு ஜெ பித்து வந்தால் ஒரு குடும்பத்தைப் பசியில்லாமல் காப்பாற்றும்.

“ஆவஹந்தியும் அடுப்பிலே நெருப்பும் இருந் தால் சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை” என்பது கேரள நாட்டுப் பழமொழி.

தேள்கடி, பாம்புக்கடி, விஷம் இறக்க மந்திரம் உண்டு. எதிரிகளின் சதித் திட்டங்களை முறியடிக்க மந்திரம் உண்டு. வீட்டில் உள்ள கெட்ட தேவதைகளை விரட்ட மந்திரம் உண்டு. வீடு, தோட்டங்களில் திரு டுகள் நடக்காமல் தடுக்க மந்திரம் உண்டு. நல்லது செய்யவும் மந்திரம் உண்டு. கெட்டது செய்யவும் மந்திரம் உண்டு.

எல்லா மந்திரமும் எல்லோர்க்கும் பலித்து விடுவதில்லை. ஏன்?

தாமிரப் பாத்திரத்தில் தயிரை எடுத்துச் சென்றால் தயிர் கெட்டுப் போகும். சாக்கு




மாதம் இரண்டு முறை வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


மூட்டையில் தண்ணீரை முகர்ந்து கொண்டு செல்ல முடியாது. அது போலத்தான் மந்திரங்களும்!

அதன் குணத்துக்கேற்ற தன்மை படைத்தவர்கள் யாரோ அவர்களால் தான் பலன் பெற முடியும். இது தெரியாமல் தன் விருப்பப்படி மந்திரததைத் தேர்ந்தெடுத்து பலன் காணாமல் பலர் தோற்று விடுகிறார்கள்.

உண்மையான உபாசகன் தன் உள்ளத்துக்கும் உடல் அமைப்புக்கும் மன நிலைக்கும் தக்கபடி ஒரு குருவிடமிருந்தே மந்திர உபதேசம் பெற வேண்டும்.

சிலருக்கு ஆண் தெய்வ மந்திரங்கள் பலிக்கும். சிலருக்குப் பெண் தெய்வ மந்திரங்கள் பலிக்கும். இவற்றையெல்லாம் தக்க குருமார்களிடமிருந்து கேட்டறிந்து பயன்பெற வேண்டும். இந்த மந்திரம் இவனுக்குப் பலன் தருமா என்று பார்த்தே குரு மந்திரம் சொல்வார். “சித்தாரி கோஷ்டம்” என்று அதற்குப் பெயர்.



# மதுரை மீனாட்சி திருக்கல்யாணமும் அழகர் ஆற்றில் இறங்கும் வைபவமும்

மதுரை என்றாலே மதுரமான மக்களும், தெய்வமும் குடிகொண்டுள்ள ஊர் என்பார்கள், இந்தியாவில் எந்த மாநிலத்திலும், எந்த மாவட்டத்திலும் இல்லாத சிறப்புகள் மதுரைக்கு உண்டு, உலகிற்கு ஆதாரமானவள் பெண் என்பதை இன்றும் நிருபித்துக் கொண்டிருப்பது மதுரை மட்டுமே, பிறந்த வீட்டினரையும், புகுந்த வீட்டினரையும் விட்டுக்கொடுக்காமல் ஆட்சி புரியும் ஒரே பெண் அரசி மதுரை மீனாட்சிதான். இதனால்தான் மதுரையில் பிறந்த மக்களுக்கும் விட்டுக் கொடுக்கும் எண்ணம் பிறவியிலேயே தோன்றியுள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக மதுரை சித்திரைத் திருவிழாவினை கூறலாம், பல லட்சம் வெளிமாவட்ட, மாநில, வெளிநாட்டு மக்கள் பங்கேற்றாலும் எந்த வித சண்டை சச்சரவுகளும் இல்லாமல், வெளியாட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அனுசரித்து போவது, திருமண வீட்டில் பெண் வீட்டுக்காரர்கள் நடந்து கொள்ளும் விதத்தைப் போன்று இருக்கும்.

எந்தவித ஏற்றத்தாழ்வும் பாராமல், அழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தை அந்த அளவுக்கு மிக விமரிசையாகக் கொண்டாடி வருகிறார்கள் மதுரைக்காரர்கள். திருவிழா நடக்கும் பத்து நாட்களும் ஊரே விழாக்கோலம் பூண்டிருப்பது சிறப்பு. மதுரை மற்றும் சுற்றிலுமுள்ள ஊர்களில் இருந்து குடும்பத்துடன் புறப்பட்டு வந்து சேருவார்கள். சுமார் பத்து லட்சம் பேருக்கு மேல் ஒரே இடத்தில் கூடும் திருவிழா இது.

சைவ, வைணவத்தை இணைக்கும் இணைப்பு பாலமாக மதுரை மீனாட்சி திகழ்வது சிறப்பிலும் சிறப்பு.

மதுரையிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில், அமைந்துள்ளது அழகர்மலை, இந்த



மலையை தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு காளை வடிவத்தில் இருப்பதால் இந்த மலைக்கு 'விரிஷபாத்ரி' என்ற பெயர் உண்டு.

எமலோகத்தை ஆட்சி செய்யும் எமதர்மன் தனது அகந்தையால் சாபத்தைப் பெற்று அவதி படுகிறார், தனது சாபம் தீர இந்த மலைக்கு வந்து பெருமாளை தீவிரமாக வழிபட்டுபெருமாளிடம் சாப விமோசனம் பெறுகிறார், சாபத்தின் தீவிரத் தை அனுபவித்த எமதர்மன், பெரு மாளிடம் ஒரு கோரிக்கை வைக்கிறார், 'தனக்கு சாபவிமோசனம் கொடுத்தது போல இங்கே கோவில் கொண்டு மானிடர்களுக்கும் அருள்புரிய வேண்டும்' என்று பெருமாளிடம் வேண்டிக் கொள்கிறார். எம னின் கோரிக்கையை ஏற்று பெருமாள் இங்கு குடி கொண்டு மக்களுக்க அருள்புரிவதாக ஐதீகம்.

இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாள் எந் நேரமும் பக்தரை காக்கும் விதத்தில் தயார் நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது, இதற்கு சான்றாக பெருமாளின் கையில் உள்ள சக்கரம் எப்போதும் புறப்படத் தயாராக இருக்கும் வகையில் மிக நேர்த்தியாக காட்சியளிக்கிறது. இதுமட்டுமின்றி சுந்தரராஜப் பெருமாளின் கையில் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என பஞ்சாயுதங்களுடன் பக்தர்களை ஷன நேரத்தில் காத்திட தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.

## தேவலோக தங்கத்தில் செய்த இரண்டு பெருமாள் சிலைகள்

இத்தலத்தின் இன்னுமொரு சிறப்பு இத்தலத் தில் வீற்றிருக்கும் உற்சவர்தான், இந்த உற்சவர் தங்கத்தால் செய்யப்பட்டுள்ளார், அதுவும் பூமியில் கிடைக்கும் தங்கத்தில் அல்ல, தேவலோகத்தில் கிடைக்கும் 'அபரஞ்சி' என்ற அரியவகை தங்கத்தால் செய்யப்பட்டவர் உற்சவர்.

இந்த வகை தங்கத்தால் ஆன பெருமாள் சிலை உலகில் இரண்டு மட்டுமே உள்ளது. ஒன்று திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவி லிலும் மற்றொன்று அழகர் மலையிலும் மட்டுமே உள்ளதாக கூறப்படுகிறது.

## அழகர் ஏன் ஆற்றில் இறங்குகிறார்?

அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் என்பது இரண்டு விதமாக கூறப்படுகிறது.

### ஒன்று...

சுதபஸ் என்ற முனிவர், நூபுரகங்கையில் தீர்த்தமாடி, பெருமாளை நோக்கித் தவ மிருந்தார். அந்தச் சமயத்தில் துர்வாச மகரிஷி, தன் பரி வாரங்களோடு அவ்வழியாக வந்தார். பெருமாளையே நினைத்துக் கொண்டிருந்த முனிவர், ரிஷி வந்ததைக் க வ னி க் க ா ம லி ரு க் க வே ஆத்தி ரமடைந்த துர்வாசர் 'மண்டூகோ பவ' (தவளையாக போகக் கடவாய்!) என சாபமிட் டார். உடனே தவளையாகிப் போன சுதபஸ், சாபவிமோசனத்துக்கு வழிகேட்ட போது, 'விவேகவதி தீர்த்தக்கரையில்(வைகை) தவம் பண்ணிக்கொண்டிரு.

சித்ரா பௌர் ணமிக்கு மறுநாள் அழகர் அங்கு வந்து உனக்கு சாபவிமோசனம் கொடுப்பார்' என சொல்லியிருக்கிறார் துர்வாசர். அதன்படி வைகைக் கரையில் தவம் செய்து கொண்டிருந்த சுதபஸ் முனிவருக்கு, விமோசனம் கொடுக்க அழகர் மதுரைக்கு வந்து போனதாகப் புராணங்கள் விவரிக்கின்றன.

### மற்றொன்று....

பெருமாளின் சகோதரி அம்பாள், அந்தவகையில் அழகர் மீனாட்சியின் சகோதரர் என்பதால் மீனாட்சி கல்யாணத்தின் போது பெண்ணை தாரை வார்த்து கொடுக்க அழைக்கப்பட்டார், கல்யாணத்தில் கலந்து கொள்வதற்காக அழகர் மலையிலிருந்து மதுரைக்கு பயணம் செய்தார்.

அழகர் மலையில்இருந்து 20 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவை கடந்து வரும்போது வழிநெடுக மக்கள் திரண்டு நின்று அழகருக்கு வரவேற்பு கொடுக்கவே, பக்தர்களுக்காக நின்று நின்று வரும் அழகர், தல்லாகுளத்தில் வந்து தங்கினார்.

குறித்த நேரத்தில் தங்கை மீனாட்சி கல்யாண நிகழ்வில் கலந்து கொள்ள வர இயலவில்லை, மூகூர்த்த நேரம் கடந்துவிடுமோ என்ற அச்சத்தில் அழகர் இல்லாமலே தங்கை மீனாட்சியின் திருமணம் நடந்து முடிந்துவிடுகிறது.

மறுநாள் வைகை ஆற்றை கடக்கும் போது திருமணம் முடிந்ததை கேள்விப்பட்ட அழகர் கோபம் கொண்டு மதுரை செல்லாமலேயே அழகர் மலை திரும்பினார் என்று இரண்டு விதத்தில் புராணங்களில் கூறப்படுகிறது.

## அழகர் வருகை விபரம்

சித்ரா பௌர்ணமிக்கு நான்கு நாள் முன்னதாகச் சித்திரைத் திருவிழா தொடங்கிவிடுகிறது. முதல் இரண்டு நாட்கள் கோயிலில் இருப்பார் அழகர். மூன்றாம் நாள் மாலை மதுரையை நோக்கிப் புறப்படுகிறார். கள்ளர் கொண்டை, கொண்டையில் குத்தீட்டி, கையில் வலைதடி (பூமராங்), இடுப்பில் ஜமதாடு (ஒருவகை கத்தி) என விதவிதமான ஆயுதங்களுடன் மதுரை நோக்கிப் புறப்படுகிறார் கள்ளழகர்.

## ஜமீன் காவல்!

கள்ளழகரின் பாதுகாவலராக வெள்ளியங் குன்றம் ஜமீன்தார் நியமிக்கப்பட்டிருந்தார். இன்றுவரை அந்த ஜமீன் வாரிசுகள்தான் கள்ள ழகருக்குப் பாதுகாப்பு. இன்றும் ஜமீன்தார் வந்து அவருக்குரிய மரியாதைகள் வழங்கப்பட்ட பிறகுதான் கோயிலைவிட்டு மதுரைக்குக் கிளம்புவார் அழகர்.

அந்தக் காலத்தில் அழகருக்குப் பாதுகாவலாகக் குதிரை பூட்டிய சாரட் வண்டியில் அழகரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டே இருப்பார் ஜமீன். அழகர் மீண்டும் அழகர் மலை வரும் பத்து நாட்களும் அவர் அழகருடன் இருப்பார். இப்போதும் அதே வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஆரம்ப காலத்தில் கோயிலைவிட்டு கிளம்பும் அழகர், அலங்காநல்லூர் போய்ச் சேருவார். அங்கு அழகரை குதிரை வாகனத்தில் அலங் காரம் செய்து ஆற்றில் இறங்குவார்கள்அழக ருக்கு அலங்காரம் செய்யும் ஊர் என்பதால், அலங்கார நல்லூராக இருந்து, பின்பு அலங்காநல்லூராக மாறிப்போனதாக கூறுவார்கள்.

அலங்காநல்லூரில் இருந்து தேனூருக்கு வந்து வைகை ஆற்றில் இறங்கும் அழகர், அதன் பிறகு வண்டியூருக்கு வந்து மண்டுக முனிவருக்கு (சுதபஸ்) சாபவிமோசனம் கொடுப்பார். இதனால் மண்டூர் என அழைக்கப்பட்டு அதுவே மண்டி யூராகிப் பிறகு வண்டியூராகிப் போனதாம்.

அழகர் மலையிலிருந்து தங்கப்பல லக்கில் புறப்பட்டுவரும் அவர், வழிநெடுக பக்தர்களால் ஏற்பாடு செய்யப்படுகிறஐந் நூற்றுக்கும் மேற்பட்ட மண்டகப் படிகளில் ஆசி வழங்கிவிட்டு வருவதற்கு மூன்று நாட்கள் ஆகிவிடுகிறது.

நான்காம் நாள் இரவு தல்லாகுளம் பெருமாள் கோயி லுக்கு வந்து சேருகிறார். அதற்கு முன்னதாக மதுரை எல்லை யான மூன்றுமாவடியில் அழகரை மக்கள் எதிர் கொண்டு அழைக்கும் எதிர்சேவை நிகழ்ச்சி களைகட்டுகிறது.

நான்காம் நாள் இரவு தல்லாகுளம் பெருமாள் கோயிலில் கள்ளழகருக்கு அபிஷேகம் நடக்கும். இந்த அபிஷேகத்துக்கும் நூபுரகங்கையிலிருந்து தீர்த்த நீர் தலைச்சுமையாகக் கொண்டு வரப் படுகிறது. அபிஷேகம் முடிந்ததும் அழகருக்கு அலங்காரம் நடைபெறும்.

இந்த அலங்காரத்தில் அந்த வருடம் நாடு எப்படி இருக்கும் என்பதை தனது உடையின் வாயிலாக மக்களுக்கு தெரிவிப்பதாக ஒரு ஐதீக நிகழ்வு நடைபெறும்.

அழகருக்கான ஆடைகள், அலங்காரப் பொருட்கள் அனைத்தும் ஒரு பெரிய மரப்பெட் டியில் இருக்கும். இந்தப் பெட்டிக்குள் சிவப்பு, வெள்ளை, பச்சை, மஞ் சள், ஊதா...என பல வண்ணங்களில் பட்டு வேட்டி இருக்கும்.



கோயிலின் தலைமைப் பட்டர் அந்தப் பெட்டிக்குள் கைவிட்டு ஏதாவதொரு புடவையை எடுப்பார். அவர் கையில் எந்த வண்ணப் புடவை சிக்குகிறதோ, அது அன்றைய தினம் அழகருக்கு அணிவிக்கப்படும். அழகர் எந்த வண்ணப் புடவை கட்டி ஆற்றில் இறங்குகிறாரோ அதற்கேற்ப அந்த வருடத்தில் நல்லது கெட்டது நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.



- பச்சைப்பட்டு கட்டி வந்தால் நாடு செழிப்பாக இருக்கும்.
- சிவப்புப் பட்டு கட்டிவந்தால் அந்த வருடம் போதிய விளைச்சலு மிருக்காது. நாட்டில் அமைதியும் இருக்காது. பேரழிவு ஏற்படும்.
- வெள்ளை மற்றும் ஊதாப்பட்டு கட்டி வந்தால் நாடு இடைப்பட்ட நிலையில் இருக்கும்.
- மஞ்சள்பட்டு கட்டிவந்தால், அந்த வருடத்தில் மங்களகர நிகழ்வுகள் நடக்கும்.

இப்படி நம்பிக்கை இருப்பதால் 'ஆற்றில் இறங்க வரும்போது அழகர் என்ன கலர் பட்டு உடுத்தி வரப் போறாரோ?' என பக்தர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஐந்தாம் நாள் பௌர்ணமியன்று, அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம். இதற்கு தல்லாகுளத்தை விட்டு கள்ளழகர் கிளம்பியதுமே தண்ணீர் பீய்ச்சும் வைபவம் தொடங்குகிறது.

அந்தக் காலத்தில் அழகர் வருவதற்குப் புதிதாகப் பாதை அமைத்ததால் தூசி கிளம் பாமல் இருப்பதற்காகவும், வெப்பத்தைத் தணிப்பதற் காகவும் தண்ணீர் பீய்ச்சும் வழக்கத்தைவைத்திருக் கிறார்கள். காலப்போக்கில் தண்ணீர் பீய்ச்சுவது ஒரு முக்கிய வைபவமாக மாறிப்போனது.

அழகர் ஆற்றில் இறங்கி வண்டியூர் போய்ச் சேரும் வரை இந்த வைபவம் கலகலப்பாக நடக்கிறது. ஆற்றிலிறங்கும் அழகரை மதுரையில் உள்ள வீரராகவப் பெருமாள் எதிர்கொண்டு அழைப்பார். ஆற்றுக்குள் இருவரும் மாலை மாற்றி மரியாதை ஏற்றுக் கொள்வார்கள்.

அதன்பிறகு மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் தருவதற்காக வண்டியூரை நோக்கிக் கிளம்புவார் அழகர். வழிநெடுக வரவேற்பு பெற்றுக்கொண்டு ஐந்தாம் நாள் இரவு வண்டியூர் போய்ச் சேருகிறார் அழகர்.

ஆறாம் நாள் அதிகாலையில் அழகருக்கு ஏகாந்த சேவை. பயணக்களைப்பு நீங்குவதற்காக சந்தன அலங்காரம் செய்யப்படும், பின்பு கள்ளழகர், வண்டியூர் பெருமாள் கோயிலை வலம் வருவார். அதன்பிறகு சர்ப்பவாகனத்தில் புறப்பட்டு தேனூர் மண்டபம் (இந்த மண்டபம் வைகை ஆற்றுக்குள் திருமலைநாயக்கரால் கட்டிக் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே தேனூரில் நடந்து கொண்டிருந்த வைபவங்கள் இப்போது இந்த மண்டபத்தில் நடக்கிறது) வந்து சேருகிறார் அழகர்.

தேனூர் மண்டபத்தில் தங்க கருட வாகனத் துக்கு மாறும் அழகர், அங்கிருந்து மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் தருகிறார். பிறகு தேனூர் மண்டபத்திலிருந்து மதுரை நோக்கிவரும் அழகர், ராமராயர் மண்டகப்படி மண்டபத்துக்கு ஆறாம்நாள் இரவு வந்து சேருகிறார். அன்றிரவு அங்கு தங்குகிறார்.

இரவு முழுவதும் தசாவதார அலங்காரங்களில் தோன்றி பக்தர்களைப் பரவசப்படுத்தும் அழகர், ஏழாம் நாள் காலையில் அங்கிருந்து அனந்தராயர் பல்லக்கில் (திருமலை நாயக்கரின் திவானால் செய்து கொடுக்கப்பட்ட இது முழுக்கத் தந்தத்தால் இழைக்கப்பட்டது) தல்லாகுளத்திலுள்ள சேதுபதிராஜா மண்டபம் வரைக்கும் வருவார். அன்றிரவு அங்கு அழகருக்கு அலங்காரம் கலைக்கப்பட்டு பூப்பல்லக்கில் ஜோடனை நடக்கும்.

எட்டாம்நாள் அதிகாலையில் பூப்பல்லக்கில் மலைநோக்கிக் கிளம்பும் அழகர் வழிநெடுக பூஜை புனஸ்காரங்களை ஏற்றுக்கொண்டு ஒன்பதாம் நாள் காலையில் அழகர் கோயிலைச் சென்றடைவார். பத்தாம் நாள் பயணக்களைப்பு நீக்குவதற்காக உற்சவசாந்தி அபிஷேகம் நடக் கிறது.

www.aanmeegamalar.com

# ஏழுலகை வென்ற மதுரைப் பெண்ணும்

# மீனாட்சி திருக்கல்யாண வரலாறும்



மதுரையை ஆண்டுவந்த மலையத்துவஜன் என்ற பாண்டிய மன்னனும், இவரது மனைவி காஞ்சனமாலையும் குழந்தை பாக்கியத்துக்காக பார்வதி, பரமசிவனை வேண்டி யாகம் நடத்துகின்றனர். மனமிரங்கிய பார்வதி தானே 3 வயதுப் பெண் குழந்தையாக நெருப்பில் இருந்து வந்து காஞ்சனமாலையின் மடியில் வந்து விழுகிறாள். குழந்தையைப் பார்த்து மகிழ்ந்து போன அரசனும், அரசியும் அந்தக் குழந்தை மூன்று ஸ்தனங்களுடன் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைகின்றனர்.

அப்போது வானில் தோன்றிய அசரீரி இவளை ஒரு ஆண்பிள்ளை போல வளர்த்து பட்டத்து ராணியாக முடி சூட்டுங்கள். மணப் பருவம் வந்த உடன் அவளது மூன்றாவது ஸ்தனம் மறைந்து விடும் என்கிறது.

மீனாட்சி ஆணுக்கு நகரான அனைத்து வகைபோர்க்கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். மதுரையின் அரசியாக, மங்கையர்க்கரசி மீனாட் சிக்கு பட்டாபிஷேகம்நடக்கிறது.

மூன்று தனங்களுடன் பிறந்த மீனாட்சி, எந்த மன்னனைப் பார்க்கும் போது ஒரு தனம்

மறைகிறதோ, அவரையேதிருமணம் செய்துகொள் வார் என்று மலையத்துவஜ மன்னன் கூறுகிறான். பட்டாபிஷேகதிற்குப் பிறகு மதுரையிலிருந்து படையுடன் கிளம்பி, ஒவ்வொரு திக்கிற்கும் சென்று போர்தொடுக்கிறார் மீனாட்சி.

பூமியில் உள்ள ஒவ்வொரு மன்னனையும் வெற்றி கொள்கிறார். அவ்வாறு கிழக்குதிசையில் அவர் சென்றபோது, அமராவதி நாட்டின் மன்ன னான இந்திரன் மீனாட்சியுடன் போர் செய்கிறான். ஆனால் மீனாட்சியின் வீர பராக்கிரமத்திற்கு ஈடு கொடுக்காமல் பணி கிறான்.

இப்படி ஒவ்வொருதிசையிலும் போர் தொடுத்து அனைவரையும் தன் காலில் விழச் செய்கிறார் மீனாட்சி.

இதேபோல, கயிலாயத்தின் மீது படையெ டுத்து செல்கிறார் மீனாட்சி. அங்கு குடியிருக் கும் சிவபெருமான் மீனாட்சியை யார் என்று அறிந்தவர் ஆதலால், உற்சாகத்துடன் அன்னை யை எதிர்கொள்ளச் செல்கிறார்.

படையுடன்வீரம் கொப்பளிக்க நின்று கொண்டிருக்கிறார் மீனாட்சி. எதிர்ப்புறத்தில் சிவபெருமான் வந்து கொண்டிருக்கிறார். சிவ பெருமான் நெருங்கி வர வர அன்னையின் உள்ளத்தில் வெற்றி வேட்கை குறைந்து வெட்கம் முடி சூடுகிறது.



சிவபெருமான் அருகில் வர வர தனது கையில் இருந்த வாளைகீழே போட்டு விட்டு தலை குனிகிறார். அப்போது மீனாட்சியின் மூன்றாவது தனம் மறைகிறது. தனது மனாளனைக் கண்ட பூரிப்பில் ஆழ்ந்து நிற்கிறார்அன்னை.

அப்போது சிவபெருமான், "அங்கயற்கண்ணியே நீ என்று மதுரையம்பதியை விட்டு படையுடன் கிளம்பினாயோஅன்றே நானும் உன்னைப் பின்தொடர ஆரம்பத்து விட்டேன். இன்றுதான் உன்னை நேரில் காண்கிறேன். இனிமேல் நீயே என் துணைவி" என்று கூறவே அன்னையின் முகம் வெட்கத்தால் சூரியனைப் போல சிவந்தது.

உலகையே வென்று, மனாளனைக் கண்ட அன்னைக்கு நடைபெறும் திருமண நிகழ்வு மதுரையில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கு கிறது.

உலகெங்கும் உள்ள சிவ பக்தர்கள் அம்பாளின் திருமண வைபவத்தைக் காண சித்திரை மாதத்தில் மதுரையில் ஒன்று கூடுவதாக கூறப் படுகிறது.


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# மதுரை சித்திரை திருவிழாவில் பல லட்சம் மக்கள் கலந்து கொள்வதன் ரகசியம்



எந்த வழியிலாவது இறைநிலை அடைந்தால் போதும் என்றுதான் அனைத்து மக்களும் பக்தி மார்க்கத்தில் அடியெடுத்து வைக்கின்றனர், இதற்காக பல்வேறு பூஜை, யாகம், யோகம் போன்றவற்றை எந்தவித சுனக்கம் இன்றி செய்ய மக்கள் தயங்குவதில்லை. இப்படி பட்ட சூழ்நிலையில், ஒரே இடத்தில் பிரபஞ்ச சக்திகள் அனைத்தையும் சூட்சும மாக தரிசிக்கலாம் என்றால் கண்டிப்பாக மக்கள் அந்த இடத்தில் ஈ மொய்ப்பதைப் போன்று மொய்க்கவே செய்வார்கள். இதற்கு சான்றாகத்தான் மதுரை சித்திரைத் திருவிழா அமைந்துள்ளது.

உலகில் உள்ள அத்துனை தேவர்களும், மகரிஷிகளும், சித்தர்களும், பூதகணங் களும், அனைத்து தெய்வங்களும் மதுரையில் மீனாட்சி, சுந்தரேஸ்வரரின் திருமணம் நடந்தபோது கலந்து கொண்டதாக புராணங்கள் கூறுகின்றன.

பூலோகத்தில் ஒன்று கூடும் இறைசக்திகளுடன் மக்களும், ஒன்று கூடி இவர்களின் ஆசிகளைப் பெறுவதற்காக பல லட்சம் பக்தர்கள் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதாக கூறப்படுகிறது.

## ஐந்து சபைகளில் வித்தியாசமானது மதுரை வெள்ளிசபை

சிவபெருமானின்அம்சமான நடராஜருக்கு ஐந்து சபைகள் உள்ளது. பரதத்திற்கு முக்கி யத்துவம் தரும் இந்த ஐந்து சபை களிலும் ஐந்துவிதமான திருவிளை யாடல்களை இறைவன் நடத்திக் காட்டியுள்ளார். இந்த ஐந்து சபைகளை பஞ்ச சபை என்று அழைப்பார்கள்.

பஞ்ச சபைகளிலுள்ள நடராஜர்களில் மதுரை யிலுள்ள வெள்ளியம்பல நடராஜரே பெரிய மூர்த்தியாவார்.

சிதம்பரம், திருவாலங்காடு, திருநெல்வேலி தலங்களில் சிறிய மூர்த்தியாக பஞ்சலோகவிக்ரக மாகவும், குற்றாலத்தில் ஓவிய வடிவிலும் இருக்கிறார். இங்கு மட்டும் சிலாவிக்ரகமாக, பெரிய வடிவில் காட்சி தருகிறார். இவர், பத்து கரங்களுடன் ஆயுதம் ஏந்தி காட்சிதருவது விசேஷம். அருகில் சிவகாமி அம்மைஇருக்கிறாள்.

சபை முழுக்க வெள்ளியால் உருவாக்கப்பட்டுள் ளது. தனி வாசலும் இருக்கிறது. முன்புறம் வியாக்ர பாதரும், பதஞ்சலி மகரிஷியும் வணங்கிய படி இருக்கின்றனர்.

உற்சவ நடராஜர் அருகில் இருக்கிறார். இவரது சன்னதி எதிரே நின்று சுந்தரேஸ்வரரையும், நடராஜரையும் ஒரே நேரத்தில் தரிசிக்கலாம்.

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில் **புத்தகத்தில்** (e-book) **வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

# 160

க்கும் மேற்பட்ட

**இதழ்களை**




# aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**





# பக்தனின் அன்பு கட்டளையால் பாதம் மாற்றி ஆடிய நடராஜர்

மதுரையில் மீனாட்சி, சுந்தரேஸ்வரரின் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் தேவர்கள், மகரிஷிகள், சித்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இவர்களில் வியாக்ரபாதர், பதஞ்சலி ஆகிய மகரிஷிகளும் அடக்கம். திருமணத்திற்கு வந்தவர்களுக்கு விருந்து பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது.

வியாக்ரபாதரும், பதஞ்சலியும் மட்டும் சாப்பிடவில்லை. இவ்விருவரும் சிதம்பரத்தில் நடராஜரின் நடனம் கண்டு உண்ணும் வழக்கமுடையவர்கள். அவர்களை மணவீட்டார் சாப்பிட அழைத்தனர்.

தாங்கள் சிவதாண்டவம் கண்டபின்பே சாப்பிடுவோம் என்றனர் இருவரும். அதைக்கேட்ட சிவன், மகரிஷிகளுக்காக இங்கு ஆனந்த தாண்டவம் ஆடிக்காட்டினார். இதைப் பார்த்த பிறகே மகரிஷிகள் சாப்பிட்டனர்.

இந்த நிகழ்வை குறிக்கும் விதமாக மீனாட்சியம்மன் கோவிலில் இரஜித சபை (வெள்ளி சபை) அமைந்துள்ளது. மற்ற இடத்தில் இருப்பதைப் போன்றுதான் ஆரம்ப காலத்தில் இந்த சபையிலும் நடராஜரின் நடனக் கோலம் அமைந்திருந்தது,

ஆனால் பிற்காலத்தில் இடக்காலை ஊன்றி, வலது காலை தூக்கி ஆடியவாறு நடராஜர் காட்சி அளித்தார், இதற்கு ஒரு சுவாரஸ்யமான புராணக் கதை உள்ளது.

மதுரையை ராஜசேகர பாண்டிய மன்னன் ஆண்டான். சிவபக்தனான அவன் ஆயகலைகளில், 63 ஐ கற்றுத்தேர்ந்தான். பரதம் மட்டும் பாக்கியிருந் தது. ஒரு சமயம் அவன் மற்றொரு மன்னனுடன் போட்டியிட வேண்டிய சூழ்நிலை வந்தது.

எனவே, பரதம் கற்றுக்கொள்ள வேண்டிய

கட்டாயம் ஏற்படவே, அதைக் கற்றான். முதல் நாள் பயிற்சி எடுத்த மன்னனுக்கு, காலில் கடும் வலி உண்டானது. அப்போதுதான் அவனுக்கு சுள்ளென ஓர் உண்மை உரைத்தது.

“ஆஹா! பரதம் கற்க இன்று ஒருநாள் ஆடிய நமக்கே இப்படி வலிக்கிறதே! இங்கே எம்பெருமான் தொடர்ந்து ஒரே காலை மட்டும் ஊன்றியல்லவா ஆடிக்கொண்டிருக்கிறார்? அவருக்கு எவ்வளவு வலி இருக்கும்?” என நினைத்தவன், நடராஜர் சன்னதிக்குச் சென்றான்.

”பகவானே! உன் கால் வலிக்குமே! காலை மாற்றி ஆடு!” என வேண்டினான். பக்தனின் வேண்டுதலை ஏற்ற சிவன், அவனுக்காக இடக் காலை ஊன்றி, வலது காலை தூக்கி ஆடினார்.

இவர் சுந்தரேஸ்வரர் சன்னதி முன்புள்ள மகா மண்டபத்தில் கால் மாற்றி ஆடிய கோலத்தில் காட்சி தருகிறார். வியாக்ரபாதர், பதஞ்சலிக்காக ஆடிய ஆனந்த தாண்டவமும், மன்னனுக்காக கால் மாற்றி ஆடிய தாண்டவமும் நடராஜர் சன்னதி எதிரேயுள்ள சுவரில் சித்திரமாக வரையப் பட்டுள்ளது.

சிவன் பாதம் பார்க்க வேண்டுமா: சிவபெருமானின் இடப்பகுதி, அம்பாளின் அம்சமாகும். எனவே சிவனின் இடக்கால் அம்பிகைக்குரியது ஆகிறது. பொதுவாக கோயில்களில் நடராஜர், இடது காலை தூக்கித்தான் ஆடிய கோலத்தில் இருப்பார்.

எனவே, அவரது தூக்கிய திருவடியை அம்பாள் பாதமாகவே கருதுவர். ஆனால், இக் கோயிலில் வலதுகாலை தூக்கி ஆடிய கோலத்தில் இருப்பதால், இந்த பாதத்தை சிவனின் பாதமாக கருதுகின்றனர். சிவத்தலங்களில் இங்கு மட்டுமே சிவனின் பாதத்தை தரிசிக்கலாம் என்பது விசேஷம்.

## பிள்ளைத்தமிழ் பாடிய குமரகுருபரர் மீனாட்சி அம்மன் அணிவித்த மாலை

தீவிர முருக பக்தரான குமரகுருபரர் காசியாத்திரை புறப்பட எண்ணினார், திருச்செந்தூர் முருகன் அருளால் கவிபாடும் புலமை பெற்றிருந்த இவர் காசியாத்திரையின்போது, மதுரை வழியாக சென்றார்.

மதுரை மீனாட்சியின் தரிசனத்தில் உருகிப்போனார், மகாராணியாக மதுரையை ஆளும் தெய்வமாக இருந்தாலும், மீனாட்சியை குழந்தையாக பாவித்து “பிள்ளைத்தமிழ்’ பாடத் துவங்கினார், இவர் பாடுவதை மனமுருகி திருமலை நாயக்கர் கேட்டுக்கொண்டிருந்தார்.

குமரகுருபரரின் பிள்ளைத் தமிழுக்கு உருகிய மீனாட்சி குழந்தை வடிவில் வந்து பாடலை கேட்டாள். அவருக்கு தன் கழுத்தில் அணிந்துஇருந்த முத்து மாலையை எடுத்து அணிவித்தாள்.



மீனாட்சியம்மை மாலையின் வடிவத்தைப் பார்த்த திருமலைநாயக்கர் இது அம்பாளின் மாலை என்பதை அறிந்து, அம்பாளே நேரில் வந்து குமரகுருபரருக்கு காட்சியளித்ததை சிறப்பிக்கும் வகையில், பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள், அம்பாள் சன்னதியை சுற்றியுள்ள சுவரில் சிற்பமாக்கப்பட்டது.

குமரகுருபரர் பிள்ளைத் தமிழ் பாடியது, அம்பிகை மாலை அணிவித்தது ஆகிய நிகழ்ச்சிகளை அம்பாள் சன்னதி முன்புள்ள ஆறு கால் மண்டபத்தில் இன்றும் ஓவியமாக காணலாம்.


மாதம் தோறும் 2 புத்தகங்கள்
மலர்-3 இதழ்-68 ஜுன் 16-30 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
e- magazine
ஆன்மிகமலர்
மெயில் புக்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மாதமிருமுறை
உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்
ஆன்மிகமலர் mobile app
Google Play
சிவ அதிர்வை தரும் வில்வ இலை பூஜை
சனிதோஷம், தீயசக்திகளை விரட்டும் மூத்ததேவி வழிபாடு
மழை வேண்டி இறைவனிடம் கூட்டு பிரார்த்தனை செய்யுங்கள்
முதல்வர் அறிவிப்பு: சென்னையில் கொட்டிய மழை
ஆன்மிகமலர் e-magazine
படியுங்கள் இலவசமாக
aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# கை விரல்களும் விரல்கள் கூறும் ரகசியங்களும்

நமது விரல்களில் மோதிர விரலில் அணியப்படும் மோதிரம், இருதய நோய், வயிற்றுக் கோளாறுகள் போன்ற வியாதிகளை நீக்குகிறது. ஆண் பெண் இன விருத்தி உறுப்புகளுக்கு சக்தி அளிக்கிறது.

சுண்டு விரலில் மோதிரம் அணியக் கூடாது. இதனால் இதயசக்தி ஓட்டம் தடைபடும்.

நடு விரல் என்று சொல்லப்படும் பாம்பு விரல் உங்களை பற்றி குறிப்பதால், நடு விரலில் மோதிரம் அணிந்தால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் நீங்களாகவே தடைகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள் என்று பொருள்.

மேலும் நம்முடைய நான்காவது விரலை ஏன் மோதிர விரல் என்கிறோம் தெரியுமா?

நம் ஐந்து விரல்களுமே, நமது ஐந்து சொந்தபந்தங்களை குறிக்கின்றன

அதாவது பெரு விரல் (கட்டை விரல்) உங்களது பெற்றோரை பற்றி குறிக்கின்றது.

(இந்த கட்டை விரலின் துணையில்லாமல் மற்ற நான்கு விரலாலும் தனித்து எந்த காரியமும் செய்ய முடியாது)

இந்த கட்டைவிரலில் மோதிரம் அணிவதால், உங்களால் கையாள இயலாத, குறிப்பிட்ட விதமான சக்திகளை உங்களை நோக்கி நீங்கள் ஈர்க்கும்படி நேரும்.

உங்களை அது உலுக்கிப் போடலாம்.



நீங்கள் குறிப்பிட்ட சில இடங்களுக்குசெல்லும் போது, கட்டை விரலில் மோதிரம் அணிந்திருந்தால் அது குறிப்பிட்ட விதமான சில சக்திகளை உங்களை நோக்கி ஈர்க்கும்.

அதனால் உங்கள் வாழ்க்கையே உலுக்கப் படலாம்.

குறிப்பாக, நீங்கள் கட்டைவிரலில் மோதிரம் அணிந்திருந்தால்,நீங்கள் சிலருக்கு அழைப்பு விடுக்கிறீர்கள் என்று அவர்கள் நினைத்துக் கொள்வார்கள்.

கட்டை விரல் உங்களது பெற்றோரை பற்றியும்,

ஆள்காட்டி விரல் உங்களின் சகோதரங்களை பற்றியும்,

நடு விரல் உங்களை பற்றியும்,

மோதிர விரல் உங்களின் வாழ்க்கை துணையை பற்றியும்,

சிறிய விரல் (சுண்டு விரல்) உங்களின் பிள்ளைகளை பற்றியும் குறிக்கிறது.

உங்களின் இரு உள்ளங்கைகளையும் நேருக்கு நேராக ஒட்டி இருக்கும்படி செய்யுங்கள்.

உங்களைப்பற்றி குறிக்கும் நடு விரல்களை மடித்து ஒட்ட வையுங்கள்.

மற்றைய விரல்களை நிமிர்த்தி ஒட்ட வையுங் கள்

இப்போது உங்களது பெருவிரல்களை(கட்டை விரல்களை) பிரித்துப்பாருங்கள், பிரிக்கமுடியும்.

அதாவது உங்களின் பெற்றோர் உங்களுடன் எப்போதும் இருக்கமாட்டார்கள் என்பதை இது உணர்த்துகிறது.

பெருவிரல்களை பழையபடி ஒட்டி வைத்து சுட்டு விரல்களை(ஆள்காட்டி விரல்களை) பிரித்துப்பாருங்கள், பிரிக்கமுடியும்.

அதாவது உங்களின் சகோதரங்கள் உங்களுடன் எப்போதும் இருக்கமாட்டார்கள் என்பதை இது உணர்த்துகிறது.

இதுபோல் உங்களின் சிறிய விரல்களை(சுண்டு விரல்களை) பிரித்துப்பாருங்கள், பிரிக்கமுடியும்.

அதாவது உங்களின் பிள்ளைகள் உங்களுடன் எப்போதும் இருக்கமாட்டார்கள் என்பதை இது உணர்த்துகிறது.

ஆனால் உங்களின் மோதிர விரல்களை பிரித்துப்பாருங்கள்.

பிரிப்பது மிகவும் சிரமமாக இருக்கும்.

அதாவது கணவன் மனைவி எப்போதும் ஒன்றாக பிரியாமல் இருக்க வேண்டும் என்பதற்க்காகவே திருமண சடங்குளில் மோதிர விரலில் மோதிரம் அணிய வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது

# தில்லியில் ‘சீதா கல்யாண மஹோத்ஸவம்’







பக்தர்களின் நலன் கருதி, நெய்டாவில் உள்ள ஸ்ரீ விநாயகர் மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் ஸ்ரீ ராமாயண மூல பாராயணமும், உபன்யாசம், நடைபெற்றது. பங்குனி 27 தொடங்கி, சித்திரை 5ஆம் தேதி வரை நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை வேத பிரச்சார சன்ஸ்தான் (VPS) நிர்வாகம் செய்திருந்தது.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக ‘சீதா கல்யாண மஹோத்ஸவம்’ இடம்பெற்றது. இந்த ‘உத்ஸவம்’ ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணாபிரேமி ஸ்வாமிகளுடைய பிரதம சிஷ்யரான, பிரம்மா ஸ்ரீ யக்ஞராம பாகவதர்அவர்களால் நடத்தப்பட்டது. நிகழ்ச்சி நடை பெற்ற ஒன்பது நாட்களும் ஸ்ரீ வால்மீகி ராமாயணம் மூல பாராயணமும் உபன் யாசமும், நடத்தினார்.

ஏப்ரல் 16ஆம் தேதி நடைபெற்ற சீதா கல்யாண வைபவத்தில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணத் துடன் நிகழ்ச்சி துவங்கியது.

ஏப்ரல் 10ம் தேதி ஸ்ரீராம ஜனனம், ஸ்ரீ சீதா கல்யாணம், கௌசல்யா மங்களாசாசனம், பாதுகா பட்டாபிஷேகம், சபரி மோக்ஷம், சுக்ரீவ பட்டாபிஷேகம், சுந்தர



காண்டம், விபீஷண சாரங்கதி, ஸ்ரீபாவம், பட்டாபிஷேகத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. ஸ்ரீமதி ஹரிப்ரியா யக்ஞராமன் அவர்களால் தினமும் ராமாயணம் பாராயணம் செய்யப்பட்டது.



எஸ்.வெங்கடேசன்

மேலும், இந்நிகழ்ச்சியில், நொய் டாவில் உள்ள விஎஸ்எஸ் பஜனை மண்டலி, 'அஷ்டபதி பஜனைகளை' வழங்கியது, ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலியின் மகளிர் பிரிவு, ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் மற்றும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் ஆகியவற்றின் வழக்கமான பாராயணத்தை வழங் கியது.

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா தொடர்பு எண்: 9811161370

ஆன்மிகமலர்
மெயில் புக்

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க












## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்










# கண்பார்வையை தந்து அங்கையற்கண்ணியான மதுரை மீனாட்சியம்மன்

எத்தனையோ சிறப்புகள் மதுரை மீனாட்சியம் மனுக்கு இருந்தாலும், இவரை அங்கையற்கண்ணி என்ற சிறப்பு பெயருடனும் அழைக்கப்படுகிறார்.

கண்பார்வையில் கோளாறு, பிரச்சனை உள்ள வர்கள் மீனாட்சியை வணங்கினால் பிரச்சனைகள் தீரும் என்பது நம்பிக்கை.

அன்னை மீனாட்சிக்கு அங்கயற்கண்ணி என்ற கண்ணோடு சம்பந்தப்பட்ட பெயர் உண்டு. இதற்கு மீன் போன்ற கண்களை உடையவள், மீன் தன் குட்டிகளை கண்களாலேயே பாதுகாப்பது போல காப்பவள் என்றெல்லாம் பொருள் சொல் வார்கள். ஆனால், தீயில் தன் கண்களை இழந்த பக்தருக்கு மீண்டும் பார்வையை தந்த தால் இவளை அங்கையற்கண்ணி என்றே அழைத் தனர்.

மெய் ஞானியான நீலகண்ட தீட்சிதர், சிறுவயதிலேயே மீனாட்சி உபாசகராக



திகழ்ந்தார். இவரது ஞானத்தை கண்ட திருமலை நாயக்கர், இவரை தனது அமைச்சராக நியமித்தார். அரச பதவி ஏற்றாலும் ஆன்மிக வாழ்க்கையை கைவிடாமல் தத்துவ மார்க்கத்தில் ஈடுபாட்டுடன் விளங்கினார் நீலகண்டதீட்சிதர்.

நீலகண்டருக்கு ஒரு பெருஞ்சோதனை காத்திருந்தது. திருமலை மன்னரின் மனைவியின் சிலையை தீட்சிதரின் நேரடிப்பார்வையில் சிற்பி சுந்தரமூர்த்தி செதுக்கினார். ராணியின் வலதுதொடையில் ஒரு லேசான சில்லுக்கல் சிதறி விழுந்தது சிலையில் குறையாக தெரிந்ததால் சுந்தரமூர்த்தி அதைச் சரி செய்ய முயன்றார். மீண்டும் அதே இடத்தில் சில்லு சிதறி விழுந்தது. தெய்வீகக்கலையில் கைதேர்ந்த தீட்சிதரிடம் சிற்பி இதுபற்றி தெரிவித்தார்.

ஞானக்கண் கொண்டு பார்த்த தீட்சிதருக்கு ராணியின் வலத்தொடையில் மச்சமிருப்பது தெரிந்தது. ஆகையால், அது அப்படியே இருக்கட்டும் என்று சிலையை அமைத்துவிடும் படி கட்டளையிட்டார். நடந்த நிகழ்ச்சிகளை அறிந்த திருமலை நாயக்க மன்னர் மனதில் சந்தேகம் ஏற்பட்டது. அவரைக் கைது செய்யும் படி உத்தரவிட்டார். காவலர்கள் அவரது வீட்டுக்கு வந்தனர்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அலை நாளமும்!!

அவர்கள் நடந்ததை தெரிவித்து கைது செய்ய வந்திருப்பதாகக் கூறினர். அப்போது, தீட்சிதர் உலகை ஈன்ற நாயகி மீனாட்சியம்மைக்கு கற்பூர ஆரத்தி செய்து கொண்டிருந்தார். தன் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த மாமன்னர் தன் மீது சந்தேகம் கொண்டதை எண்ணி வருந்தினார். உணர்ச்சிவசப்பட்டவராய், கற்பூர ஜோதியை தம் கண்ணில் வைத்து கண்களைப் பொசுக்கிக் கொண்டார்.

மன்னருக்கு செய்தி பறந்தது. அவர் தம் தவறை உணர்ந்து தீட்சிதரின் இல்லத்துக்கு ஓடோடி வந்து தவறுக்கு வருத்தம் தெரிவித்தார்.

மீனாட்சியின் பூரண ஆசிபெற்ற நீலகண்ட தீட்சிதர் மீனாட்சியம்மன் மீது "ஆனந்த சாகர ஸ்தவம்" என்னும் 108 ஸ்லோகங்களைச் சொல்லிப் பாடினார். அப்போது மீண்டும் கண்ணொளி கிடைத்தது. பின்னர் திருமலை மன்னர், நீலகண்டருக்கு திருநெல்வேலி அருகிலுள்ள பாலாமடை என்ற இடத்தை தானமாக அளித்தார். அங்கே ஒரு சிவலாயம் அமைத்த தீட்சிதர், அம்மையையும் அப்பனையும் வழிபட்டு அங்கேயே சமாதிநிலை அடைந்தார்.

கண்பார்வையில் கோளாறு உள்ளவர்கள் மீனாட்சி அம்மனை நினைத்து "ஆனந்த சாகர ஸ்தவம்" என்னும் 108 ஸ்லோகங்களைக் கூறினால் நல்ல பலன் கிடைக்கும்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் **160** இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# சூரியனுக்கு ஒளி தந்த ஆதிசங்கரர்



பகவத் கீதையில் கண்ணபெருமான் சொல்லுவான் தர்மம் எப்போதெல்லாம் தவித்து நிற்கிறதோ அப்போது அதை காப்பாற்ற நான் மீண்டும் மீண்டும் வருவேன் என்று கண்ணன் இதை ஆறுதலுக்கு சொல்லவில்லை தர்மத் திற்கும் தர்ம வழிபட்ட வாழ்க்கைக்கும் சோதனைகள் வரு கின்ற போது பல்வேறு வடிவங்களில் அவன் தோன்றி யுள்ளான்.

இன்றும் கூட தர்மத்தை ரச்சிக்கும் அவனது அவதாரம் உலகமுழுவதும் சிறிதாகவும் பெரிதாகவும் நடந்துகொண்டே வருகிறது. நமது பாரத நாடும் பாரத நாட்டின் ஆத்மாவான இந்துதர்மமும் வேத கால முடிந்து அதன் பிறகு வந்த சரித்திர காலத்தில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற மனித மனங்கள் அதிகரித்து விட்டதனால் ஆட்டம் கண்டு தவறான பாதையில் நாட்டம் கொண்டு சென்று கொண்டிருந்தது அப்போது நம்மையும் நம் தர்மத்தையும் காப்பாற்ற பகவான் ஒரு அவதாரம் எடுத்தான் அந்த அவதாரத் தின் பெயர் ஆதிசங்கரர்.


ஆதிசங்கர அவதாரம் இந்தியாவில் கேரளாவில் காலடி என்ற ஒரு சின்னஞ்சிறிய கிராமத்தில் உஞ் சவிருத்தி எடுத்து வாழும் ஒரு ஏழை அந்தணனின் குடும்பத்தில் நிகழ்ந்தது மூப்பத்திரெண்டு ஆண்டுகள் மட்டுமே பூமியில் நடமாடிய அந்த அவதார திருவுருவம் இந்துமதத்திற்கும் இந்து மக்களுக்கும் செய்த தொண்டுகளை

வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது காற்று வேகத்தை விட கடுமையான வேகம் என்று மனோ வேகத்தை சொல்வார்களே அந்த மனோ வேகத்தால் கூட ஆதிசங்கரரின் சமய தொண் டின் சிகரத்தை அறிவின் உயரத்தை தொட்டு விட முடியாது.

பாரத திருநாடு எங்கும் பாத யாத்திரை செய்து காஞ்சிமாநகருக்கு வந்திருந்த சங்கரர் ஒரு காரியம் செய்தார். அக்னி, குபேரன், பிரம்மன், மன்மதன், எமன், வருணன்,வாயு போன்ற தேவர்கள் உள்ளிட்ட பலநூறு தேவர் களை கொண்டாடும் எழுபத்தி இரண்டு மத பிரிவு களாக நமது மதம் பிரிந்து கிடப்பதை கண்டார். அந்த மதங்களில் பல சனாதன தர்மத்தின் ஆத்மாவான வேதநெறிக்கு புறம்பானதாகவும் விரோதமாகவும் இருந்தன.

அவைகளில் உள்ள விஷ தன்மையை போக்கி அவைகளை சைவம், சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம், காணபத்யம், சௌரம் என்ற ஆறு பிரிவுகளுக்குள் எழுபத்தி இரண்டு பிரிவுகளை அடக்கினார். அந்த பிரிவுகளில் உள்ள எல்லா தெய்வங்களும் சிவன், விஷ்ணு, பராசக்தி, முருகன், கணபதி, சூரியன் ஆகிய தெய்வ மூர்த்திகளுக்குள் அடங்கி விடுவதை தத்துவ பூர்வமாக எடுத்து காட்டினார்.

சங்கரர் இந்த மதங்களை அதாவது இந்து மதத்தில் சன்மதங்கள் என்று அழைக்கிறோமே அந்த ஆறு பிரிவுகளை உருவாக்க வில்லை மாறாக சீர்திருத்தி களைய வேண்டியவைகளை களைந்து புகுத்த வேண்டியவைகளை புகுத்தியும்



ஒழுங்கு படுத்தினார். அப்படி ஒழுங்கு படுத்தி விட்டு மற்ற விஷயங்கள் தானாகவே நடந்து கொள்ளுமென்று சும்மா இருக்க அவரால் இயலவில்லை எனவே அந்த மதங்களை நாடு முழுவதும் பரப்புவதற்கும் மக்கள் பின்பற்றுவதற்கும் அறிவு பூர்வமான தனது சீடர்களை அனுப்பி வைத்தார். இதனால் தான் ஆண்டுகள் ஆயிரம் அல்ல அதற்கு மேலும் கடந்து போனாலும் பகவத் பாதாள் ஆதி சங்கரரை ஷண்மத ஸ்தாபகர் என்று உலகம்

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



போற்றி புகழ்கிறது. இத்தகைய அறிய பணியை சங்கரர் என்ற தனி ஒரு அவதாரம் செய்ய வில்லை என்றால் இன்று இந்து மதமும் இல்லை இந்தியாவும் இல்லை.

சங்கரர் ஒரு அத்வைதி அதாவது ஜீவாத்மா வேறு பராமாத்மா வேறு என்று சொல்வதும் நம்புவதும் மாயை பாரமாத்மாவின் தோற்றமே சகல வடிவாகவும் இருக்கிறது. அதாவது பரமாத்மா ஒன்றே எல்லாமாக இருக்கிறது. என்று உபதேசம் செய்தவர் அவர். அப்படி பட்ட சங்கரர் அழகான உருவங்களோடு அருள்பாலிக்கும் இறைவனை சகுன பிரம்மாக வழிபடுவதற்கு வழிவகை செய்வாரா? அதற்காக உருவ வழிபாட்டை ஊக்குவிக்கும் மத பிரிவுகளை ஒன்றினைப்பாரா? என்று சிலர் கேள்விகள் எழுப்புகார்கள். அவர்களே சங்கரர் ஒன்றும் மத பிரிவுகளை இணைக்கவில்லை சங்கரரின் பெயரை பயன்படுத்திக்கொண்டு வேறு யாரோ அந்த காரியங்களை செய்தார்கள் என்றும் பதில் சொல்கிறார்கள். இது மிகவும் தவறுதலான அணுகுமுறையாகும்.


சமயம், கலை, கலாச்சாரம், சாஸ்திரம் போன்ற பெரிய விஷயங்கள் அறிவையும் மனதையும் குழப்ப கூடியது. நடு காட்டிற்குள் அகப்பட்டு கொண்டவனுக்கு எப்படி திசை தெரியாதோ அதே போலவே சாமான்ய மனிதர்களால் இவை களை புரிந்துகொள்ள இயலாது. எப்போது ஒரு விஷயம் மனித குலத்திற்கு புரியவில்லையோ அப்போதே குழப்பங்களும் கலவரங்களும் வந்துவிடும். அதன் முடிவு விபரீதமாக அழிவு பாதையை நோக்கி போய்விடும். அதை தடுப்பதற்கே மகான்களும் தீர்க்க தரிசிகளும் தோன்றி நல்லது எது கெட்டது எது என்று நம்மை போன்ற சராசரி மனிதர்களுக்கு புரிய வைக்கிறார்கள்.

நமது வைதீக மதம் ஒரு இளம் மூங்கில் போல வளைந்து கொடுக்க கூடியது. எந்த திசையை நோக்கி யார் இழுத்தாலும் இழுத்த இழுப்புக்கு செல்ல கூடியது. அதாவது எல்லாவற்றிகும் ஈடுகொடுக்க கூடியது. இதனால் சகல தரப்பு மக்களும் பல தெய்வங்களை வழிபட்டதுடன் பல மூட பழக்கங்களையும் கைகொண்டவர்கலாக இருந்தார்கள். அப்படி அவர்கள் பின்பற்றுகின்ற நெறிமுறையில் அர்த்தமற்ற அறிவுபூர்வமற்ற சங்கதிகளை விலக்கி அதாவது சக்கையை விலக்கி சாரத்தை கொடுத்து சமய நெறியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய கால கட்டத்தில் சங்கரருக்கு ஆறு மதங்களையும் ஒன்றாக இணைக்க வேண்டிய கட்டாய நிலை இருந்தது. இதை அவர் தெளிவாகவும்

எளிமையாகவும் தனது அறிவு திறத்தால் செய்தார்.

மேலும் இந்த ஆறு சமையங்களும் தலைமை செயலகம் போன்றது. மற்ற அனைத்துமே இதன் கிளை அலுவலங்கள் தான். சிவ சக்தி உள்ளிட்ட ஆறு தெய்வங் களுக்கு அனுசரணையாக இருப்பது தான் மற்ற தெய்வங்கள். எனவே அவைகளை தனித்தனியாக கொண்டாடவேண்டிய அவசியமில்லை இதுவுமல்லாது ஒரு மனிதனை எடுத்த எடுப்பிலையே காணும் பொரு ளெல்லாம் கடவுளாக பார் என்று கட்டயபடுத்த முடியாது. அது ஆகாத காரியமும் கூட ஒன்றாம் வகுப்பு துவங்கி தான். முதுகலை படிப்பு வரை செல்ல இயலும். அகரம் முதல் எழுத்துக்களை கற்றவுடனையே கல்லூரி படிப்பில் தேர்ச்சி பெற்று விடு என்றால் குழப்பமும் அறியாமையும் தான் விளையும். இதை கவனத்தில் கொண்டே உருவ வழிபாட்டையும் அது கனிந்த பிறகு ஆத்ம தரிசனத்தையும் பெற வழிவகை செய்தார் சங்கரர் என்று துணிந்து சொல்லலாம்.








இப்படி சங்கரரால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆறு மதங்களில் இது முக்கியமானது அது முக்கியமில்லாதது என்ற வேறு பாடு கிடையவே கிடையாது. ஒரு மனிதன் முழுமனிதனாக நடமாட எல்லா அங்கங்களும் எப்படி அவசியமோ அப்படியே சனாதன தர்மம் நிலைத்து நிற்க ஆறு மத பிரிவுகளும் அவசியமாகும். அத்தகைய வரிசையில் சௌரம் என்பது கடேசியில் வருகிறது என்பதற்காக அது குறைந்தது அல்ல குறைபட்டதும் அல்ல. சூரியன் எப்படி உயிர்கள் வாழ அத்யாவசிய தேவையோ அதே போலவே சூரியனை மூல பரம்பொருளாக கொண்டாடும் சௌரமும் மற்ற மத பிரிவுகள் வளமையோடும் செழுமை யோடும் ஜீவிக்க உதவி செய்கிறது.


யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

சூரியன் இல்லை என்றால் உயிர்கள் இல்லை உயிர்களின் வளர்ச்சியும் இல்லை வாழ்க்கையும் இல்லை அவனுடைய சக்தியால் தான் பயிர்கள் வளர் கிறது. தண்ணீர் ஓடுகிறது காற்று வீசுகிறது. அக்னி கீழிருந்து மேல் நோக்கி தாவுகிறது. ஆகாசம் கூட அவனது சக்தியால் தான் வியாபித்து இருக்கிறது. அந்த சூரியனையே சிவனாகவும் திருமாலாகவும் மக்கள் வழிபட்டாலும் சூரியனை மட்டுமே தனி ஒரு தெய்வமாக உலகை காத்து ரச்சிக்கும் கடவுளாகொண் டாடுகிறது ஒரு மதம் அதன் பெயர் சௌரம் அந்த மதத்தின் உள்ளர்த்தங்களை அடுத்த பதிவு களில் விரிவாக காண்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434





# வானவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் மதுரை மீனாட்சி கோவிலில் உள்ள

# பூகோளம் - ககோளம்

பூமி உருண்டையா, தட்டையா என்ற ஆராய்ச்சி உலககெங்கும் நடைபெற்றது, ஆரம்பத்தில் பூமி தட்டை என்று உலக விஞ்ஞானிகள் கூறினார்கள், பின்பு அது மறுக்கப்பட்டு, உலகம் முட்டை வடிவம் என்றும், சதுரம், அரைகோளம் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் கூறினர்,

ஆனால் கடைசியில் பூமி உருண்டை வடிவம் என்றும், சற்று சாய்ந்த கோளத்தில் இருக்கும் என்றும் கணித்துள்ளனர்.

ஆனால் இவர்களின் கணிப்பையெல்லம் இந்துமதம் எப்போதோ தனது வானவியல் சாஸ்திரத்தில் சரியாக கணித்திருந்தது, அந்த கணிப்பை மெய்ப்பிக்கும் வகையில் அரக்கர்களால் பூமி களவாடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதாகவும், பெருமாள் பன்றி உருவம் ஏந்தி வராக மூர்த்தியாக பூமியை தனது முகத்தில் தாங்கி காத்ததாகவும் புராண இதிகாச கதையில் குறிப்பிட்டு, பெருமாளின் அவதாரங்களில் முக்கிய அவதாரமாக வராக மூர்த்தி அவதாரத்தையும் உருவாக்கியதன் மூலம், பூமி உருண்டை வடிவம் என்று பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே கணித்தனர்.

ஆனால் தற்கால விஞ்ஞானம் பல நூறு ஆண்டு ஆராய்ச்சிக்குப் பின்பு பூமி உருண்டை என்பதை தற்போதுதான் ஒப்புக்கொண்டுள்ளது.

நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சி இவ்வாறிருக்க, அன்றே கணித்துக் கூறிய இந்து மத இதிகாசங்களை புறந்தள்ளிவிடக்கூடாது, அந்த வகையில் மதுரையில் மீனாட்சி அம்மன் கோவிலில் காட்சி தரும் இரண்டு வித ஓவியங்களை ஆராய்ந்து பார்த்தால் இன்னும் வெளிவராத பல விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளுக்கு விடை கிடைக்கும்.

மீனாட்சி கோயிலின் பழைய திருமண மண்டபத்தில் ககோளம், பூகோளம் என்ற இரண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களை மிகப்பெரிய அதிசயமாகப் பார்க்கப்படுகிறது. இந்த ஓவியங்களில் பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், தேன்கடல், சுத்த நீர் கடல் ஆகியவற்றை எல்லாம் வரைந்து வைத்துளளனர்.



## சுகோளம்:

சூரிய மண்டலம் 9 ஆயிரம் யோசனை (ஒரு யோசனை என்பது 24 கி.மீ.) பரப்பளவு கொண்டதாக இருந்தது. அதைச்சுற்றி இரண் டாயிரத்து எழுநூறு யோசனை பரப்பு கொண்ட வளையம் இருந்தது. நாம் வாழும் பூமி 50 கோடி யோசனை விஸ்தீரணம் உடையதாக இருந்தது. இந்த பூமியின் மத்தியில் ஜம்புத்வீபம் என்ற தீவு இருந்தது. அந்த தீவில் மேருமலை அமைந்திருந்தது.

மேரு மலைக்கு கிழக்கே இந்திர பட்டணமும், தெற்கில் எமபட்டணமும், மேற்கில் வருண பட்டணமும் இருந்தன. இந்த பட்டணங்களில் உலகத்தை பாதுகாப்பதற்காக தேவர்கள் வசிப்பார்கள். இந்த மண்டலங்களில் என்னென்ன தீவுகள், வீதிகள் இருந்தன என்பது குறித்த விபரம் சுகோள ஓவியத்தில் இருக்கிறது.

அக்கால தேவர் உலகை இந்த ஓவியத்தை பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

இந்த ஓவியத்தில்....

- ❖ அசுவினி, பரணி, கிருத்திகை, மிருகசீரிஷம் ஆகிய நான்கு நட்சத் திரங்களைக் கொண்ட நாகவீதி.
- ❖ புனர் பூசம், பூசம், ஆயில்யம் ஆகிய நட்சத்திரங்கள் அடங்கிய ஐராவத வீதி, ஆர்ஷ வீதி, கோ வீதி.
- ❖ திருவோணம், அவிட்டம், சதயம் ஆகியவை இணைந்த ஜரத்துருவ வீதி.
- ❖ அஸ்தம், சித்திரை, சுவாதி அடங்கிய மற்றொரு நாகவீதி.
- ❖ விசாகம், ஜேஷ்டம், அனுஷம் ஆகியவை அடங்கிய மிருகவீதி.
- ❖ மூலம், பூராடம், உத்திராடம் ஆகியவை அடங்கிய வைஸ்வாநர வீதி. உள்ளிட்ட பல வீதிகள் அடங்கியுள்ளன.

## பூகோளம்:

இந்த பிரபஞ்சத்தில் ச்வேதத்வீபம் என்னும் கிரகம் உள்ளது. அந்த கிரகத்தில் பாற்கடல் இருக்கிறது. பூமியில் உப்புநீர் கடல் இருப்பதுபோல மற்ற கிரகங்களில் பலவகைப்பட்ட சமுத்திரங்கள் இருப்பதாக வேத இலக்கியங்களிலிருந்து தெரிய வருகிறது.

பாற்கடல், எண்ணெய்க்கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், தேன்கடல் ஆகியவை இதில் அடங்கும். இந்த கடல்களுக்குள் கசேறு, இந்திர தீவு, தாமிரபரண தீவு, கபஸ்திமம், நாகத்தீவு, சவுமிய தீவு, காந்தர்வ தீவு, பாரத்தீவு இருந்தன. இவை பற்றிய விஷயங்களை இந்த ஓவியத்தில் பார்க்கலாம்.

நவீன விஞ்ஞானத்தில் இந்த ஓவியங்களை ஒரு ஆராய்ச்சிக்கு அடித்தளமாக எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் வானவியலில் உள்ள பல மர்மங்களுக்கு விடை கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

# ஆன்மீக வழியில் அமைதி




நாம் அனுபவவிக்கிற ஸ்தூல பஞ்சபூதங்கள் என்பவை கண், காது, மூக்கு, நாக்கு, தோல் போன்றவையாகும். நாம் அனுபவவிக்கிற ஸ்தூல பஞ்சபூதங்கள் முதலில் சூக்ம பஞ்சபூதங்களாக இருந்து ஸ்தூல பஞ்சபூதங்களாக மாறி வரபெற்றது என்று சாஸ்திரம் கூறுகிறது. சூக்ம சரீரம் என்பது ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து பிராண சக்திகள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் போன்றவையாகும். ஸ்தூல சரீரத்தில் சூக்மமாக இருக்கும் நமது மனம் சூக்ம பஞ்சபூதங்களால் சூக்மமாக செயல்படுகிறது. பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி, நுகரும் சக்தி, சுவை உணரும் சக்தி, தொட்டு உணரும் சக்தி போன்ற சக்திகளை நம் கண்களால் பார்க்க முடியாது.

ஏனென்றால் இவைகள் எல்லாம் சூக்மமான பஞ்சபூதங்களிலிருந்து வரப்பெற்றதால் ஞானேந்திரியங்கள், கர்மேமேந்திரியங்கள் போன்ற சக்திகளை கண்களால் பார்க்க முடியாது. அவைகளை சூக்ம சரீரங்களால் அதாவது நமது மனதால் மட்டும் அனுபவித்து உணர முடியும். அதாவது பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி போன்ற சக்திகளை மனதால் உணர்ந்து கொள்வதற்கு முடியும். எடுத்துக்காட்டாக ஒருவனது அழகிய கண்களை வைத்து அவனுக்கு பார்க்கும் சக்தி இருக்கிறது என்று கூற முடியாது. அதேபோல் காதுகளின் புறத்தோற்றத்தை வைத்து அவனுக்கு காதுகளால் கேட்கும் சக்தி இருக்கிறது என்று கூற முடியாது. நமது சூக்ம பஞ்சபூதங்களால் செயல்படுவதுதான் நமது சூக்ம சரீரமான மனம் ஆகும்.

சூக்ம சரீர சக்திகள் அதாவது சூக்ம சரீரங்கள் இரண்டாவது சிருஷ்டி ஆகும். சூக்மமான பஞ்சபூதங்கள் ஸ்தூல பஞ்ச பூதங்களாக மாறுதல் மூன்றாவது சிருஷ்டி ஆகும். அதாவது நாம் இந்த உலகத்தில் அனுபவவிக்கும் ஸ்தூல பஞ்சபூதங்களின் தத்துவம் மூன்றாவது சிருஷ்டி. சூக்ம பஞ்சபூதங்கள் நாம் இந்த உலகில் நாம் காணும் இன்ப துன்பங்களை

65

அனுபவவிக்கும் ஸ்தூல சரீரங்களாக மாறி விடுவதுதான் நான்காவது சிருஷ்டி என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது பஞ்சபூதங்கள் நாம் காணும் ஸ்தூல சரீரங்களாக மாறி விடுகின்றன.

சூக்ம பஞ்ச பூதங்கள் தோன்றியது முதல்நிலை. அடுத்து சூக்ம சரீரங்கள் என்பது என்ற இரண்டாம் நிலை தோன்றியது. முதலில் மனம் என்னும் சூக்ம பஞ்ச பூதங்கள் உருவாக்கப்பட்டது. இரண்டாம் நிலை சூக்ம சிருஷ்டியாகும். ஸ்தூல பஞ்ச பூதங்கள் மூன்றாம் நிலையாகும். பஞ்ச பூதங்கள் முதல் நிலையில் சூக்மமாக தோன்றியது. இரண்டாம் நிலையில் பஞ்ச பூதங்கள் ஸ்தூலமாக மாறி மூன்றாம் நிலையில் ஸ்தூல சரீரங்களாக மாறி விடுகின்றன என்று சாஸ்திரம் கூறுகிறது.

இந்த பிரபஞ்சத்தில் அனுபவவிக்கிற பஞ்சபூதங்களின் தத்துவம் நாம் காணும் உடல் ஆகாச தத்துவமாகவும், உடலில் ஓடும் ரத்தம் நீர் தத்துவமாகவும், உடலில் இருக்கும் உஷ்ணம் நெருப்பு தத்துவமாகவும், உடலில் இடைவிடாமல் இயங்கிக்கொண்டிருக்கும் மூச்சு வாயு தத்துவமாகவும் உடலின் இயக்கம் பூமி தத்துவமாகவும் அல்லது பிரிதிவி தத்துவமாகவும் இயங்குகிறது. இந்த பிரபஞ்சம் ஐந்து பஞ்சபூதங்கள், பத்தொன்பது சூக்ம சரீரங்கள் என இருபத்திநான்கு தத்துவங்களாக இயங்குகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

எடுத்துக்காட்டாக ஒரு அழகிய காரை பார்க்கிறோம். அந்த கார் எப்படி உருவாக்கப்பட்டது என்று சிந்தித்துப் பார்த்தால் பலவிதமான உதிரிப் பாகங்களை சேர்த்துதான் நாம் புதிய காரை பார்க்கிறோம். காரில் பொருத்தப்பட்ட உதிரிப்பாகங்களை தனித்தனியாக பிரித்து ஓரிடத்தில் குவித்துப் பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அது கார் என்று நாம் பார்க்க முடியாது. அவற்றை உதிரிப்பாகங்களின் குவியாலாகத்தான் பார்க்க முடியும். உதிரிப்பாகங்களை அறிவின் துணைகொண்டு உரிய முறையில் சேர்க்கும்போது ஒரு வடிவம் மற்றும் இயக்கம் கிடைக்கிறது. அந்த வடிவத்திற்கு கார் என்ற புதிய பெயரை சூட்டி விடுகிறோம்.

எடுத்துக்காட்டாக களிமண்ணால் செய்யப்பட்ட ஒரு அழகிய பொம்மையை எடுத்துக்கொள்வோம்.. இதில் களிமண் என்ற மூலப்பொருளிலிருந்து விரும்பிய பொம்மைகள் செய்து வண்ணம் தீட்டி அழகிய உருவப்பொம்மைகள் கிடைக்கிறது. அந்தப் பொம்மைகள் உருவாவதற்கு களிமண்தான் காரணமாக இருந்தது. களிமண்ணை வடிவமைத்து அதனுடன் நாம ரூபம் சேரும்போது காரியம்(செயல்பாடு) பொம்மை தோன்றியது. ஒரு காரணத்துடன் நாம ரூபத்தைச் சேர்த்தால் காரியம் வருகிறது. நாம ரூபத்துக்கு இன்னொரு பெயர் குணம் என்று கூறலாம். அதாவது காரணத்துடன் ஒரு குணம் சேரும்போது காரியம் வந்து விடுகிறது. அதாவது புதிய ஒரு பொருள் அல்லது ஒரு புதிய சக்தி கிடைத்து விடுகிறது. அதாவது களிமண் அழகிய வண்ணப் பொம்மையானது போல என்று கூறலாம்.


தச்சர் துண்டு துண்டாக கிடக்கும் மரத்துண்டுகளை செதுக்கி உரிய முறையில் இணைக்கிறார். ஒரு புதிய வடிவம் கிடைத்தவுடன் அதற்கு நாற்காலி என்ற பெயரைச் சொல்லி அழைக்கிறார். அதுபோல் மாயை என்ற தத்துவத்திலிருந்து புதிய தத்துவம் உருவாக வேண்டுமானால் மாயையுடன் ஒரு நாம ரூபத்தைச் சேர்க்கும்போது அல்லது குணத்தைச் சேர்க்கும்போது பிரபஞ்சத்தில் சூக்ம பஞ்சபூதங்கள் சக்தி என்ற காரியம் உருவாகி விடுகிறது.

மாயையுடன் ஏதோ ஒரு குணத்தை சேர்க்கும்போது புதிய ஒன்று உருவாகிறது. எடுத்துக்காட்டாக தங்கக் கட்டியாக இருப்பதை பொற்கொல்லர் தன்னோட அறிவின் துணைகொண்டு அதனை உருக்கி ஒரு ஆபரணத்தை உருவாக்கி விடுகிறார். மற்றொரு தங்கக்கட்டியை எடுத்து வேறு ஒரு அழகிய ஆபரணத்தை செய்து விடுகிறார். பொற்கொல்லர் தங்கக்கட்டியை உருக்கி ஏதோ ஒன்றைச் அதனுடன் சேர்த்து விதவிதமான ஆபரணங்கள் உருவாக்குகிறாரோ உருவாகிறதோ அதேபோல் மாயையுடன் ஏதோ ஒரு நாம ரூபம் சேரும்போது நாம் காணும் பிரபஞ்சம் தோன்றியது. உலக வழக்கில் காரணம் இல்லாமல் காரியம் தோன்றுவதில்லை என்று கூறுவதை நாம் கேட்டிருப்போம்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஒரு காரின் எல்லாப் பகுதிகளையும் தனித்தனியாக பிரித்து குவித்து வைத்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குவியலை நாம் கார் என்று அழைப்பதில்லை. அந்தக் குவியலில் உள்ள சக்கரங்கள், ட்யூப், கிளச், பிரேக் ஸ்ட்ரிங் போன்றவற்றை இயந்திரப்பொறியாளர் பொருத்தும்போது புதிய வடிவம் ஒன்று உருவாகிறது. அதற்கு




கார் என்ற பெயரை சூட்டி அழைக்கிறோம். குவியலில் உள்ளவற்றை ஒன்று சேர்த்தால்தான் கார் என்ற உருவம் அதாவது காரணத்துடன் ஒரு பொருள் சேரும்போது கார் என்ற காரியம்(உருவத்தோற்றம்) நமக்குத் தெரிகிறது.

மாயையுடன் ஏதோவொரு குணத்தை அல்லது நாம ரூபத்தைச் சேர்க்கும்போது பிரபஞ்சத்தில் புதிய வடிவம் கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக மரவேலை செய்யும் தச்சர் மரத்துண்டுகளை ஒரு கோணத்தில் சேர்க்கும்போது நாற்காலி என்ற வடிவம் கிடைக்கிறது. அவற்றை மற்றொரு கோணத்தில் அவர் சேர்க்கும்போது மேஜை போன்ற வடிவங்கள் கிடைக்கிறது. அதேபோல் இந்த மாயையுடன் ஏதோவொரு பொருள் அல்லது குணம் சேரும்போது பிரபஞ்சத்தில் புதிய சக்தியுடன் ஒரு பொருள் கிடைக்கிறது.

மாயையிடம் சப்தம் என்ற சிறப்புக் குணம் சேர்ந்து பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாசம் என்ற முதல் பூத தத்துவம் பிரபஞ்சத்தில் தோன்றியது என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆகாசம் என்பது நாம் காணும் ஸ்தூல ஆகாசம் அல்ல. சப்தம் என்றால் உலக வழக்கில் கூறும் ஒலி அல்ல என்று சாஸ்திரம் கூறுகிறது. மாயையுடன் சப்தம் என்ற சிறப்புக் குணம் சேர்ந்து மாயை சூக்மமான பஞ் சபூதங்களில் ஒன்றான ஆகாசம் என்ற முதல் பூத தத்துவம் தோன்றியது. அதாவது மாயாவே சூக்மமான ஆகாசமாக மாறியுள்ளது என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது மாயை பஞ்ச பூதங்களில் முதல் பூதமான ஆகாசமாக பரிமாணம் அடைந்துள்ளது.

பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாசம் என்ற முதல் பூத தத்துவத்தில் எத்தனை குணங்கள் உள்ளன என்று சிந்தித்துப் பார்க்கும்போது சப்தம் என்ற ஒரு குணமும் மாயையிடம் ஏற்கனவே உள்ள தமோ, ரஜோ, சத்துவ என்ற மூன்று குணங்களும் சேர்ந்து ஆகாச முதல் பூத தத்துவத்துக்கு நான்கு குணங்கள் உள்ளன. பொதுவாக பேச்சு வழக்கில் உறவின்முறையில் உள்ள பேரனைப் பார்த்து அப்பாவுடைய பிடிவாதவும் தாத்தாவின் கோபமும் சேர்ந்து இருக்கு என்று கூறுகிறோம். அதேபோல் ஆகாச பூத தத்துவத்தில் சப்தம் என்ற சிறப்புக் குணமும் மாயாவிடம் ஏற்கனவே உள்ள மூன்று குணங்களும் சேர்ந்து நான்கு குணங்களுடன் காணப்படுகிறது. அதாவது பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாச தத்துவத்துக்கு தமோ, ரஜோ, சத்துவ மற்றும் சப்தம் என நான்கு குணங்கள் இருக்கின்றன என்று சாஸ்திரம் கூறுகிறது. .

ஆகாசத்திலிருந்து பஞ்சபூதங்களில் இரண்டாவது பூதமான வாயு என்ற தத்துவம் தோன்றியது. மாயையிடம் சப்தம் என்ற குணம் சேருவதைப்போல் ஆகாசத்தில் தொட்டு உணர்வு என்ற சிறப்புக் குணம் சேருகிறது. அவ்வாறு சேரும்போது பஞ்ச பூதங்களில் ஒன்றான வாயு என்ற இரண்டாவது பூதம் தோன்றியது. அவ்வாறு தோன்றியுள்ள வாயு என்ற தத்துவத்துக்குள் எத்தனை குணங்கள் உள்ளன என்பதை சிந்தித்துப் பார்க்கும்போது, வாயுவுக்குள் மாயாவிடம் ஏற்கனவே உள்ள ரஜோ, தமோ, சத்துவ என்ற மூன்று குணங்கள், ஆகாசத்தில் ஏற்கனவே உள்ள சப்தம் என்ற ஒரு குணம் வாயுவின் தொட்டு உணர்தல் என்ற குணம் சேர்ந்து வாயு என்ற இரண்டாவது பூதத்திற்கு ஐந்து குணங்கள் இருக்கின்றன. அதாவது ரஜோ, தமோ, சத்துவ, சப்தம் மற்றும் தொட்டு உணர்தல் என்று வாயு தத்துவத்துக்கு ஐந்து குணங்கள் இருக்கின்றன.

வாயுவிலிருந்து பஞ்ச பூதங்களில் ஒன்றான அக்கினி என்ற மூன்றாவது பூதம் தோன்றியது. மாயாவிடம் சப்தம் என்ற சிறப்புக் குணம் சேருவதைப்போல் வாயுவில் ரூபம் என்ற சிறப்புக் குணம் சேருகிறது. அவ்வாறு சேரும்போது பஞ்சபூதங்களில் ஒன்றான அக்கினி என்ற மூன்றாவது பூதம் தோன்றியது என்று சாஸ்திரம் கூறுகிறது. அக்கினி என்ற பூத தத்துவத்துக்கு எத்தனை குணங்கள் உள்ளன என்று சிந்தித்துப் பார்த்தால் மாயாவிடம் உள்ள ரஜோ, தமோ, சத்துவம் மூன்று குணங்கள் ஆகாசத்திடம் இருக்கும் சப்தம், வாயுவிடம் உள்ள தொட்டு உணர்தல், அக்கினியிடம் உள்ள ரூபம் என்ற குணமும் சேர்ந்து ஆறு குணங்கள் உள்ளன. அதாவது ரஜோ, தமோ, சத்துவம்,

சப்தம், தொட்டு உணர்தல், ரூபம் என ஆறு குணங்கள் அக்கினி என்ற மூன்றாவது பூத தத்துவத்திடம் உள்ளன.

அக்கினியிலிருந்து பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் என்ற நான்காவது தத்துவம் தோன்றியது. மாயையிடம் சப்தம் என்ற குணம் சேருவதைப்போல் நீர் என்ற பூதத்தில் ரசம் என்ற சிறப்புக் குணம் சேரும்போது பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் என்ற நான்காவது தத்துவம் தோன்றியது. நீர் என்ற தத்துவத்துக்கு எத்தனை குணங்கள் உள்ளன என்று சிந்தித்துப் பார்க்கும்போது, மாயையிடம் உள்ள ரஜோ, தமோ, சத்துவம் என்ற மூன்று குணங்கள், ஆகாசத்திடம் உள்ள சப்தம், வாயுவிடம் உள்ள தொட்டு உணர்தல், அக்கினியிடம் உள்ள ரூபம், நீர் பூதத்தில் உள்ள சிறப்புக் குணம் ரசம் என ஏழு குணங்கள் உள்ளன. அதாவது ரஜோ, தமோ, சத்துவம், சப்தம், தொட்டு உணர்தல், ரூபம் மற்றும் ரசம் என ஏழு குணங்கள் நீர் தத்துவத்திடம் உள்ளன.

பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் பூத தத்துவத்திலிருந்து பிரிதிவி என்ற ஐந்தாவது தத்துவம் தோன்றியது. மாயையிடம் சப்தம் என்ற குணம் சேருவதைப்போல் பிரிதிவியில் நுகர்தல் என்ற குணம் சேரும்போது பஞ் சபூதங்களில் ஒன்றான பூமி என்ற ஐந்தாவது தத்துவம் தோன்றியது. பூமி என்ற தத்துவத்துக்கு எத்தனை குணங்கள் உள்ளன என்று சிந்தித்துப் பார்க்கும்போது, மாயையிடம் உள்ள ரஜோ, தமோ, சத்துவம் என்ற மூன்று குணங்கள், ஆகாசத்திடம் உள்ள சப்தம், வாயுவிடம் உள்ள தொட்டு உணர்தல், அக்கினியிடம் உள்ள ரூபம், நீர் பூதத்தில் உள்ள ரசம் ,பூமியிடம் உள்ள நுகர்தல் என எட்டு குணங்கள் உள்ளன. அதாவது ரஜோ, தமோ, சத்துவம், சப்தம், தொட்டு உணர்தல், ரூபம் ரசம் மற்றும் நுகர்தல் என எட்டு குணங்கள் பூமி தத்துவத்திடம் உள்ளன.

மாயையிலிருந்து ஆகாசம், வாயு, அக்கினி, நீர், பூமி என்ற சூக்ம பஞ் சபூதங்கள் தோன்றின. பஞ்சபூதங்களும் பிரபஞ்சத்தில் தனித்தனியாகத்தான் தோன்றின. அதாவது மாயையிலிருந்து ஆகாசம், ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்கினி, அக்கினியிலிருந்து நீர், நீர் தத்துவத்திலிருந்து பிரிதிவி, என சூக்ம பஞ்சபூதங்கள் தோன்றின என்று சாஸ்திரம் கூறுகிறது. மாயாவிடமிருந்து சூக்ம பஞ்சபூதங்கள் தோன்றியதால் ஒவ்வொரு பூதத்திலும் மாயையிடம் உள்ள ரஜோ. தமோ, சத்துவம் என மூன்று குணங்கள் உள்ளன. அதாவது பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாசம் என்ற சூக்ம பூதத்தில் மூன்று குணங்கள் இருப்பதுபோல் வாயு, அக்கினி, நீர், பூமி என்ற சூக்ம பூதங்களிலும் தனித்தனியாக மூன்று குணங்கள் இருக்கின்றன என சாஸ்திரம் கூறுகிறது. .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**


ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



# பழைய சிந்தனைகளே மனித கவலைக்கு காரணமாகும்

கப்பல்.. மீனைக் கேலி செய்ய முடியுமா? முடியாது. அது போல உலக வாழ்வு, கடவுளை மிஞ்சவே முடியாது. உலக வாழ்வு கப்பல், மீன் கடவுள்.. என்பதை அறி.

● ● ●

எவ்வுயிர்களின் மனமும் புண்படாமல் பார்த்துக் கொள்.
பிறருக்கு மட்டும் இது உபதேசமல்ல. உனக்கும் இது ஒரு உபதேசமே.

● ● ●

உலகம் மனிதர்கள் அனைவரையும் ஏற்கும். உலகில் வெற்றி தோல்விகளை மனிதர்களே ஏற்க வேண்டும்.

● ● ●

என்றென்றும் வெற்றியை மட்டுமே உலகம் ஏற்கும்.

● ● ●

பந்தயத்தில் ஓடும் குதிரை கொள்ளை(உணவை) ஏற்கும். பந்தயத்தில் ஓடினாலும் பந்தயத்தை ஏற்காது. அதுபோல் ஆண்டவன் பக்தனின் பூஜைகளை ஏற்பான்.

● ● ●

கடவுள் நம்பிக்கையை மனிதனே ஏற்க வேண்டும். கடவுள் ஏற்க மாட்டான்.

● ● ●

பட்டுப் பூச்சியின் எச்சிலான பட்டு நூலுக்கே விலை அதிகம். அதுபோன்று ஆண்டவனின் விபூதி, துளசிப் பிரசாதங்களுக்கு மிகச் சிறப்புண்டு. காரணம்.. அவைகளே அருளாகின்றன.

● ● ●

கடவுளை வைத்துப் பார்த்தாலும், புத்தியை வைத்துப் பார்த்தாலும் உலகில் உண்மை ஒன்றாகவே தெரியும். இதனால் மாயை என்பதே இல்லை.

● ● ●

மாயை என்பதே மாயை. இதுவே என் எண்ணம்.

● ● ●

உண்மையை மாற்றி எழுதினால் மனிதனிடம் அவநம்பிக்கை வந்துவிட்டது என்றே பொருள்.

ஆன்மிகமலர் .காம்

● ● ●

ஆன்மீக வளர்ச்சி வாழ்க்கையாக வேண்டுமா வேண்டாமா?–
இதற்கு பதில் சொல்ல முடியாத நிலையில்தான் மனிதன் வாழ்க்கையைப் பற்றி பேசுகிறான்.

● ● ●

பழைய சிந்தனைகளை மீண்டும் நினைவுபடுத்த எண்ணாதீர்கள். மனிதனின் கவலைக்கு இதுவே காரணம்.

● ● ●

நிமிடத்திற்கு நிமிடம் வளருவதற்கே எண்ணுங்கள்.
இதுவே இறைவனின் பூஜை ஆகும்.

● ● ●



சமுதாயம் என்பது நீ. சிந்தனை என்பது அதனுடைய தேர். அதை இழுக்க முயலுகிறேன்.

● ● ●

உணர்ச்சி பெறுவீர்! உயர் கல்வி

கொள்ளுங்கள்!
தாய் மொழியை உயர்த்தவும் பற்று கொள்ளுங்கள்!

●●●

பூரணத்தை விளக்கி அதை அனுபவிப்பதே தீபாவளி பண்டிகையாகும்.

●●●

பிறரை நேசிப்பது சுலபம்; உண்மை நேசிப்பில் தடைகள் வராது. வந்தால் நாம் சரியாக இல்லை என்று பொருள்.

●●●

வரையறுக்கப்பட்ட புத்தியை வைத்துக் கொண்டு கடவுளைப் பார்ப்பது கடினம்.

●●●

'உழைப்பினால் உயர்வு' என்பதை கடவுளுடன் இணைத்தால் தான் மகிழ்ச்சி.

●●●

ஆசைகள் எல்லாம் தீர்மானங்கள் இல்லை.

●●●

சிந்தித்து அனுபவித்தால் சந்தோஷம் ஏற்படாது.

●●●

என் குணம் எனக்குத் தடையாய் இருந்தது என்று உணர்ந்தவன் உயர்ந்தான். உணராதவன் சாதாரணமான மனிதனாக இருந்து மடிந்தான்.

●●●

தனிப்பட்ட மனிதன் சொல்லி சமுதாயம் ஆண்டவனை கும்பிடாது.

●●●

கடவுளை விளக்க கற்பனையை காரணமாக வைத்து விளக்குவது ஒரு முறை. பிறகு கற்பனையே உண்மை என்று புரியும்.

●●●

வழியைக் காட்டுபவர்களை வணங்கினாலும், வணங்காவிட்டாலும் தவறில்லை. வழியை புரிந்து கொள்ளாததுதான் தவறு.

●●●

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**





# கலியுகக் கவலை நீக்கும் கலிங்கநாதீஸ்வரர்

கர்ம வினைக்கேற்பவே ஒரு மனிதனுக்கு நல்லதும், தீயதும் நடக்கிறது என்றாலும், தீவினையை அனுபவிக்கும்போது துவண்டுவிடுகிறான். அப்படி துவண்டிடும்போதெல்லாம் துணையாய் நின்று காப்பது கயிலைநாதரே! அவ்வாறு கலியுகத்தின் கவலைகளை போக்கும் கயிலைநாதர் குடிகொண்டருளும் திருத்தலங்களுல் ஒன்றாய் விளங்குகிறது இருளஞ்சேரி.

அப்பர் பெருமானால் வைப்புத்தலமாக போற்றப்பட்ட இப்பதி முன்பு இறையாஞ்சேரி என்றிருந்து, தற்போது இருளஞ்சேரி என்றும் மருவியுள்ளது.

இறைவன் வாசம் செய்யும் இடம் என்கிற பொருளிலும், மனிதனின் மன இருளை அகற்றும் சேரி என்கிற பொருளிலும் இப்பதி இறையாஞ்சேரி என்றிருந்து இருளஞ்சேரி ஆகியுள்ளது.

கி.பி.13ம் நூற்றாண்டில் திருக்கயிலை பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து, திருமூலர் வழிவந்த குரு முதல்வர் அழகிய சிற்றம்பல சுவாமிகள் திருவாரூரில் பிறந்தவர். இவர் தல யாத்திரையாக வடபுறம் வரும்போது திருவாலங்காடு, கூவம், இலம்பயங்கோட்டூர் போன்ற தலங்களை தரிசித்தபடி இருளஞ்சேரியை அடைந்து, சங்கு தீர்த்தத்தில் நீராடி, ஈசனை வணங்குகின்றார். இத்தல இறைவனால் ஈர்க்கப்பட்டு, இங்கேயே தங்கிவிடுகின்றார்.

சில காலம் இங்கு வசித்து, சிவதரிசனம் செய்த குருமுதல்வர், தேவர் சிங்க ஆதீனம் ஒன்றைத் தொடங்கினார்.18 மடங்களுள் ஒரு மடமாக இம்மடம் திகழ்ந்துள்ளது. இதை ஊரனடிகள் தான் இயற்றிய சைவமட வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். அழகிய சிற்றம்பல சுவாமிகள் அன்பர்கள் துணையுடன், இச்சிவாலயத்தை சீர்

செய்தும், அம்பாள் ஆலயத்தை ஸ்தாபித்தும், கும்பாபிஷேகம் செய்து முடிக்கின்றார். தன்னை நாடி வந்த பக்குவப்பட்ட பக்தர்களுக்கு சமய தீக்ஷையையும், விசேஷ தீக்ஷையையும் அளித்து வந்தார். ஓர் வெகுதான்ய வருஷம், ஆனி மாதம், வளர்பிறை சப்தமி திதியன்று கபால மோக்ஷம் அடைந்தார். இவரது திருச்சமாதி ஆலய தென்பாகத்தில் தனியாக அமைந்துள்ளது.

இவரது வழிவந்த ஆறாம் குரு முதல்வரான முதலாவது சிதம்பரம்நாத தம்பிரான் இப்பதி ஈசன் மீது நேசம் கொண்டு, 101 பாடல்களைக் கொண்ட கலிங்கேசன் பதிற்றுப் பத்தந்தாதியை இயற்றி, அருளியுள்ளார். அவற்றில் சில பாடல்களே கிடைக்கப்பெற்றுள்ளன.

முதலாம் பராந்தகச் சோழன் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் கலிங்க தேசத்தை வென்றதன் நினைவாக இங்கு சிவாலயம் எழுப்பியதால், இத்தல இறைவன் கலிங்கநாதீஸ்வரர் என்று போற்றப்படுகின்றார்.

ஊரின் கீழ் திசையில் பச்சைப்பசேலென வயல்வெளிகள் சூழ அமைந்துள்ளது ஆலயம். சாலையை ஒட்டி சங்கு தீர்த்தம் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமாய் காட்சி தருகின்றது. 1943 இல் கூவம் நதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் இந்த தீர்த்தக் குளத்தின் படித்துறைகள் சேதமடைந்தது. புனரமைப்பு செய்தால் மீண்டும் பொலிவுறும்.

திருக்குளத்தைக் கடந்திட, ஆலயத்திற்கு வெளியே தென்மேற்கில் அழகிய சிற்றம்பல சுவாமிகளின் சமாதிக் கோயில் தனியொரு ஆலயமாகத் திகழ்கிறது. மிகப் பெரியதொரு முகப்பு மண்டபம். உள்ளே கணபதியும், கந்தனும் இருபுறங்களிலும் காட்சி தர, கருவறையில் சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மனமுருகி இவரை வேண்டிட, நல்லருள் கிடைப்பது உறுதி.

பின் ஆலயத்தின் தென்வாயில் வழியே உள் நுழைக்கின்றோம். இடதுபுறம் திரும்ப.....ஸ்ரீ வரகு விநாயகர் தனிச்சன்னிதியில் திருக்காட்சித் தருகின்றார். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் திருவிற்க்கோலமுடையான் என்பவன் இச் சன்னிதியை கட்டியுள்ளான். கணபதியை கைதொழுது, ஐயனைக் காண விழைகின்றோம்.

தெற்கு வாசல் முன்னே, முகமண்டபம் சிம்ம தூண்களைக் கொண்டு பல்லவர் கலைத் திறனை வெளிப்படுத்தினாலும், கல்வெட்டுகள் என்னவோ சோழர்களை பிரதிபலிக்கின்றது.

ஒரே மகா மண்டபத்தைக் கொண்டுகிழக்குப் பார்த்த ஸ்வாமி சன்னிதியும், தெற்கு பார்த்த அம்பாள் சன்னிதியும் அமைந்துள்ளது. மகா மண்டபத்தில் நின்றவாரே ஒருசேர சுவாமியையும், அம்பாளையும் தரிசனம் செய்யலாம். சுவாமி சன்னதியின் அர்த்தமண்டபத்தில் ஓர் கணபதி காணப்படுகின்றார்.

கருவறையுள் சிறியதோரு லிங்கமாக தரிசனம் தந்தருள்கின்றார் ஸ்ரீ கலிங்கநாதீஸ்வரர். வழவழ பச்சைக்கல்லால் ஆன மூர்த்தம். கலியுகத்தில் அஞ்சிவோருக்கு அபயம் தந்தருளும் இறைவன் என்கிற பொருளில்... கலியஞ்சீஸ்வரர் என்றும் இவர் அழைக்கப்படுகின்றார்.

அம்பிகையாக தாயினும் நல்லாள்சிறிய திருமேனி கொண்டு பத்ம பீடத்தின் மீது நின்றவண்ணம் எழில் நகை சிந்துகின்றாள். திருமூலர் திருமந்திரத்தில் "தாயினும் நல்லாள் தாள் சடையோனே" என்கிற பாடல் வரிகளில் வரும் பெயரை இங்கு அம்பாளுக்கு சூட்டி மகிழ்கின்றார் அழகிய சிற்றம்பலநாத சுவாமிகள். தாயைவிடவும் தயை காட்டுபவள். கேட்கும் வரம் தந்தருளுபவள். இவன்னைக்கு ஸ்ரீ







காமாட்சி என்கிற பெயரும் உண்டு.

அன்னையை வணங்கி, ஆலய வலம் வருகையில்... இடையே அழகிய கலைநயம் மிகுந்த கும்பஞ்சரங்கள் பராந்தகச் சோழனின் படைப்பு இது என பறைசாற்றுகின்றன.

கோஷ்ட மாடங்களில்... முதலில் வலம்புரி கணபதி வீற்றுள்ளார். தென்முகக் கடவுளான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி பச்சைக் கல்லில் பளபளக்கின்றார். துர்கை விஷ்ணு துர்கையாக திருவருள் பொழிகின்றாள். ஸ்ரீ சண்டிகேஸ்வரர் விரித்த ஜடாமுடியுடன் விசித்திர மாக காணப்படுகின்றார்.

மேற்கு ஸ்தானத்தில் வள்ளி தெய்வானையுடன் ஸ்ரீ சுப்பிரமணியர் வீற்றருள்கின்றார்.

இப்பதி நந்தியம் பெருமானின் வலது கண் சூரியன் போன்றும், இடது கண் சந்திரன் போன்றும் வடிவமைக்கப்பட்டிருப்பது அபூர்வ அமைப்பாகும். ஈசான பாகத்தில் ஸ்ரீ காலபைரவர் குடிகொண்டுள்ளார்.

கருவரையின் வெளிப்புறச் சுவற்றினில் தொண்டை மண்டல திருத்தலங்களின் வரலாற்றினை சிறிய வடிவில் புடைப்பு சிற்பங்களாக வடித்துள்ளனர் சோழர்கள்.

அதில், பசுபூஜிக்கும் சிவன் திருப்பாசூரையும், மயில் பூஜைக்கு சிவன் மயிலாப்பூரையும், யானை பூஜைக்கு சிவம் திருக்காளத்தியையும், கழுகு பூஜிக்கும் சிவன் திருக்கழுகுன்றத்தையும், அனுமன் பூஜிக்கும் சிவன் இராமகிரியையும் தத்துரூபமாக நினைவு கூறுகின்றன. மேலும் அப்பர், சம்பந்தர், குபேரன், ரம்பா, ஊர்வசி போன்ற சிற்பங்களும் சிறப்புற வடிக்கப்பட்டுள்ளது. சிற்பக் கூடமாய் ஆலயம் திகழ்ந்தாலும், உழவாரப் பணி செய்தால்தான் பொலிவு பெறும்.



மோ.கணேஷ்

பத்தாம் நூற்றாண்டைச்சேர்ந்த சோழர்காலத்தின் எட்டு கல்வெட் டுகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1947 இல் இந்திய தொல் பொருள் துறையினரால் இவ்வெட்டு கல்வெட்டுகளும் படியெடுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டில் இவ்வூர்....ஜெயங்கொண்ட சோழமண்டலத்து, மணவிற் கோட்டத்து, தியாக சமுத்திரநல்லூர் இறையாஞ்சேரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தலை இறைவன் கலியஞ்சீஸ்வர மகாதேவர் என்று அழைக்கப்பட்டுள்ளார்.

1237-இல் இராஜராஜதேவன் எனப்படும் மூன்றாம் இராஜராஜன் தனது 22 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றில் சிந்தனை உடையார் என்கிற பெண்மணி







www.aanmeegamalar.com
aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

தனது கணவன் தியாகமேகன் என்பவனது நினைவாக இச் சிவாலயத்திற்கு விளக்கு தானம் வழங்கிய செய்தி தெரிய வருகிறது.

அனைத்து சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற நடத்தப்படுகின்றன. மாத பிரதோஷங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அதோடு மாதாமாதம் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று அழகிய சிற்றம் பல சுவாமிகளுக்கு சிறப்பு பூஜை நடக்கின்றது. ஆருத்ரா அன்று பக்தர்களால் இவருக்கு குரு பூஜை நடத்தப்படுகின்றது. சித்ரா பௌர்ணமி அன்று விசேஷ அபிஷேக அலங்கார ஆராத னைகள் இங்கு வருடாவருடம் சிறப்புடன் நடை பெற்று வருகின்றன. ஒரு கால பூஜை மட்டும் நடைபெறும் இவ்வாலயம், தினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 6:30 மணி வரையும் திறந்திருக்கும்.

சனி பிரதோஷம் தொடங்கி, தொடர்ந்து ஏழு பிரதோஷங்கள் இங்கு சிவன் பார்வதிக்கு பால் தயிர் தேன் அபிஷேகத்திற்கு தந்து, வழிபட.... ஏழரை நாட்டு சனி, அஷ்டம சனி, கண்டக சனி, பாத சனி, பில்லி சூனியம் ஏவல் போன்ற தீவினைகள் அகலும். அதோடு கலிகால கஷ்டங்கள் யாவும் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

இங்கு சுவாமிக்கு அபிஷேகம் நடத்தி புது வஸ்திரம் சாற்றி, எலுமிச்சம்பழத்தை வைத்து, பூஜித்து, அதை எடுத்துச் சென்று சாறு பிழிந்து குடிக்க... குழந்தையில்லா தம்பதிகளுக்கு




குழந்தை பேறு கிட்டும்.

ஏழு சுமங்கலிகளுக்கு இங்கு ஆலயத்தில் மங்களப் பொருட்களும், புடவை மற்றும் மஞ் சள் கிழங்கு வைத்து கொடுத்திட....புனர்பூ தோஷம் நீங்கும்.

இத்தலத்தோடு அருகிலுள்ள சிவபுரம், கூவம், இலம்பையங்கோட்டூர், பேரம்பாக்கம் நரசிங்கபுரம் மப்பேடு போன்ற சிறப்பு வாய்ந்த தலங்களையும் தரிசித்து மகிழ்ந்திடலாம்.

இக்கலியுகத் துன்பங்களிலிருந்து மீண்டிட கலிங்கநாதீசப் பெருமானை வணங்கி, வளங்கள் பல பெறுவோம்.

பூந்தமல்லியில் இருந்து 34 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பேரம்பாக்கத்தை அடைந்து, அங்கிருந்து 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள இருளஞ்சேரியை அடையலாம். சென்னையில் இருந்து 56 கிலோ மீட்டர் தூரத்தில் இருளஞ் சேரி அமைந்துள்ளது. ஆலயத் தொடர்புக்கு: தமிழ்வாணன்: 9840987534.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# மதுரை மீனாட்சி கோவிலின் சிறப்புகளில் ஒருசில



மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள சிறப்புகள் எண்ணிலடங்காதவை, ஆனால் அனைத்தையும் எளிதாக விரைவாக கூற இயலாது, எனவே ஒருசில முக்கிய சிறப்புகளை சிறு தொகுப்பாக பார்ப்போம். மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு செல்லும்போது இந்த சிறப்புகளை அறிந்து கொண்டு சென்றால் அந்த அந்த சன்னதிகளின் சிறப்புகளை நேரிடையாக காணலாம்.

## சித்தருக்கு பூப்பந்தல் வழிபாடு

18 சித்தர்களின் தலைமை சித்தராக சிவனே விளங்குகிறார். இதனால் அவர், "எல்லாம் வல்ல சித்தர்' என்று பெயர் பெற்றார். இவருக்கு இங்கு தனிசன்னதி உள்ளது. சித்தருக்கு அபிஷேகம் கிடையாது. மூலிகை மற்றும் சாம்பிராணி தைலம் மட்டும் சாத்தப்படுகிறது. இவரது சன்னதியில் மல்லிகை பந்தல் (பூக்கூடாரம்) அமைத்து வேண்டிக் கொண்டால் வேண்டியவை நிறைவேறும் என்பது நம்பிக்கை. சிவனே இங்கு சித்தராக இருப்பதால் இவரது சன்னதி எதிரே நந்தி இருக்கிறது. இந்த நந்தி சிவனின் உத்தரவிற்கு காத்திருக்கும்விதமாக, செவி சாய்த்து காட்சியளிப்பது விசேஷம்.

## வேததெட்சிணாமூர்த்தி

உபதேச தெட்சிணாமூர்த்தி முருகனை வளர்த்த கார்த்திகை பெண்களுக்கு சிவன், அஷ்டமாசித்திகளை உபதேசம் செய்தார். அவர்கள் அதனை மறந்து விட்டதால், கல்லாக மாறினர். தங்களுக்கு விமோசனம் வேண்டி

பட்டமங்கலம் (சிவகங்கை மாவட்டம்) என்னும் தலத்தில் தவமிருந்தனர். அவர்களுக்கு இத்தலத்து சிவன், குருவாக இருந்து அஷ்டமா சித்திகளை மீண்டும் உபதேசித்தார். இவர் மதுரையில் சிவன் சன்னதி கோஷ்டத்தில் "உபதேச தெட்சிணாமூர்த்தி'யாக காட்சி தருகிறார். இவரை "வேததெட்சிணாமூர்த்தி' என்றும் அழைக்கிறார்கள்.

## கொடிமரத்தில் சம்பந்தர்:

சிவன் சன்னதி எதிரேயுள்ள கொடிமரத்தில் விநாயகர், நந்தி உருவங்கள் பொறிக்கப்படுவது வாடிக்கை. ஆனால் சுந்தரேஸ்வரர் சன்னதி எதிரில் உள்ள கொடிமரத்தில் சம்பந்தர் இருக்கிறார். மதுரையை ஆட்சி செய்த பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோய் உண்டானபோது, சம்பந்தர் சிவனை வேண்டி திருநீற்றுப்பதிகம் பாடி மடைப்பள்ளி சாம்பலை கொடுத்து குணமாக்கினார்.

சமண மதத்தினருடன் போட்டியிட்டு அவர்களை வென்று மீண்டும் சைவ சமயத்தை நிலைநாட்டினார். இவ்வாறு மதுரையில் சிவ வழிபாடு தழைப்பதற்கு காரணமாக இருந்தவர் சம்பந்தர். எனவே இவருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், சுவாமி சன்னதி கொடிமரத்தில் சம்பந்தரை வடித்துள்ளனர்.

## முக்குறுணி விநாயகர்

மீனாட்சி அம்மன் கோயிலில் ஏராளமான விநாயகர் சிலைகள் இருந்தாலும் முக்குறுணி விநாயகரே உருவத்தால் பெரியவர். ஒரு குறுணி என்பது 4 படி. (6 கிலோ) இந்த விநாயகருக்கு 18 கிலோ பச்சரிசி மாவால் ஆன கொழுக் கட்டை விநாயகர் சதுர்த்தி நாளில் படைக்கப்படுகிறது.

அந்த பெயரே இவருக்கு நிலைத்துவிட்டது. திருமலை நாயக்கர் வண்டியூரில் தெப்பக்குளம் வெட்டியபோது பூமிக்குள் இந்த விநாயகர் சிலையை கண்டெடுத்தனர். அதை மீனாட்சியம்மன் கோயிலில் அவர் பிரதிஷ்டை செய்தார். இந்த விநாயகர் முன்பு உள்ள நிலை விளக்குகளில் திருமலை நாயக்கர் மற்றும் அவரது குடும்பத்தினரின் உருவங்களை பார்க்கலாம்.

## செல்வ வளம் தரும் விபூதி விநாயகர்

தெற்கு கோபுரத்தை கடந்து உள் நுழையும் இடத்தில் பக்தர்கள் விபூதியால் அர்ச்சிக்கும் விபூதி விநாயகர் அருள்பாலிக்கிறார். மன்னர்கள் காலத்தில் யாரோ ஒரு சிற்பி, இக்கோயிலுக்கு வரும் அனைத்து பக்தர்களும்தாங்களே அபிஷேகம் செய்துகொள்ளும் வகையில் ஏற்பாடு செய்து தரவேண்டும் என மன்னரிடம் கேட்டிருக்க வேண்டும். அதன் அடிப்படையில் இந்த விபூதி விநாயகர் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

பக்தர்கள் தாங்கள் கொண்டு வரும்விபூதியை அபிஷேகம் செய்கிறார்கள். இவருக்கு அபிஷேகம் செய்தால் செல்வம் சேரும் என்பது நம்பிக்கை. "விபூதி' என்றால் "மேலான செல்வம்' என்பது பொருள். இவரை வணங்கினால், வாழும் காலத்தில் பெரும் பொருளும் வாழ்க்கைக்கு பிறகு மோட்சம் என்னும் பிறவா நிலை செல்வமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

## இரட்டை விநாயகர்

மீனாட்சியம்மன் சன்னதிக்கு இடதுபுறத்திலும் பிரகாரத்திலும் இரட்டை விநாயகர் சன்னதி இருக்கிறது. இதன் தாத்பர்யம் மிகவும் அற்புதமானது. உலகில் ஆதிமூலமாக விநாயகரை கருதுகிறோம். விநாயகரை வணங்கிய பிறகே பிற தெய்வங்களை வணங்குவது மரபாக இருக்கிறது. இந்த மரபை விநாயகரும் பின்பற்ற வேண்டும் என்பதின் அடிப்படையில் விநாயகர் கூட எந்த பூஜையை தொடங்குவதாக இருந்தாலும் தன்னைத்தானே வணங்கி தொடங்க வேண்டும் என்பதன் அடிப்படையில் இந்த சன்னதி அமைக்கப்பட்டுள்ளது.

## 48 ஆண்டாக மூடப்பட்ட கருவறை

மீனாட்சி அம்மன் கோயிலில் சொக்கநாதர் கருவறை 48 ஆண்டுகளாக மூடப்பட்டு கிடந்தது. 1330ம் ஆண்டு அன்னியர் படை யெடுப்பின் போது மீனாட்சி அம்மன் திருவுருவத்தையும், சுந்தரேஸ்வரரையும் உடைத்து நொறுக்க முயற்சி நடந்தது. கோயில் ஸ்தானிகர்கள் கருவறையில் இருந்த சிவலிங்கத்தை மூடி அதன்மேல் கிளிக்கூண்டு ஒன்றை அமைத்து மணலை பரப்பிவிட்டனர். கருவறை வாசலை கற்சுவர் கொண்டு மூடிவிட்டனர்.

கருவறைக்கு முன்பு உள்ள அர்த்த மண்டபத்தில் வேறொரு சிவலிங்கத்தை அமைத்தனர். அன்னியர்கள் அந்தச்சிலைதான் சுந்தரேஸ்வரர் என நினைத்து அதை சிதைக்க முற்பட்டனர். சிதைக்கப்பட்ட அந்த சிவலிங்கமும் தற்போது சுவாமி சன்னதியை ஒட்டி உள்ளது. சுந்தரேஸ்வரர் கருவறை 48 ஆண்டுகள்

தொடர்ந்து அடைக்கப்பட்டு பூஜை இல்லாமல் இருந்தது.

கம்பண்ணர் என்ற வீரர் அன்னியர்களை வென்று மீண்டும் கருவறையை திறக்க ஏற்பாடு செய்தார். அப்போது 48 ஆண்டுகளுக்கு முன்பு பூசப்பட்ட சந்தனம் நறுமணம் வீசியது. சிவ லிங்கத்தின் இரு பக்கமும் ஏற்றி வைக்கப்பட்ட வெள்ளி விளக்குகள் அணையாமல் எரிந்து கொண்டு இருந்தது. இது அதிசயமாக கருதப் பட்டது.

## அஷ்டசக்தி மண்டபம்:

கிழக்கு கோபுரத்தின் வழியாக அம்மன் சன்னதிக்கு நுழையும்போது முதலில் வரும் மண்டபமே அஷ்டசக்தி மண்டபமாகும். இதில் உள்ள எட்டு தூண்களில் கவுமாரி, ரௌத்ரி, வைஷ்ணவி, மகாலட்சுமி, எக்குரூபணி, ஷியாமளா, மகேஸ்வரி, மனோன்மணி ஆகிய எட்டு சக்திகள் காட்சியளிக்கின்றனர்.

இவர்களை வணங்குவோர் தைரியமாக இருப்பர் என்பது நம்பிக்கை. ஒரு காலத்தில் இந்த மண்டபம் அன்னதான மண்டபமாக இருந்தது. பிற்காலத்தில் ஆவணி மூல வீதி ஏற்பட்ட பிறகு தெற்கு ஆவணி மூலவீதியில் அமைக்கப்பட்ட சோற்றுக்கடைகளில் தானம் செய்யப்பட்டது. எனவே இங்குள்ள ஒரு தெரு வுக்கு சோற்றுக்கடைத்தெரு என்ற பெயர் இப் போதும் இருக்கிறது.

## மீனாட்சி நாயக்கர் மண்டபம்:

அஷ்டசக்தி மண்டபத்தை அடுத்து அமைந் துள்ளது மீனாட்சி நாயக்கர் மண்டபம். இதன் நீளம் 160 அடி. ஆறு வரிசைகளாக தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தின் மேல் விட்டத்தில் ராசி கட்டம் பொறிக்கப்பட்டுள்ளது. திருமலைநாயக்கரின் அமைச்சரான மீனாட்சி நாயக்கர் கட்டியதால் இந்த பெயர் பெற்றது.

## முதலி மண்டபம்:

இந்த மண்டபத்தை கடந்தை முதலியார் கட்டினார். சிவபெருமான் பிட்சாடணராக இங்கு காட்சியளிக்கிறார். மோகினியின் சிற்பத்தில் ஆடை மடிப்புகள் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

## ஊஞ்சல் மண்டபம்:

அம்மன் சன்னதி நுழைவு வாயிலை ஒட்டி ஊஞ்சல் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ராணி மங்கம்மாள் இதை கட்டினார். ஊஞ் சல் மண்டபத்தின் எதிரில் தெப்பக்குளத்தின் மேற்கு கரையில் மங்கம்மாள் மற்றும் நாயக்க அரசர்களின் தளவாயான ராமப்ப அய்யர் ஆகியோருக்கு சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## சங்கிலி மண்டபம்:

அம்மன் சன்னதி நுழைவு வாயிலில் சங்கிலி மண்டபம் உள்ளது. இதில் சுக்ரீவன், வாலி, கிராதார்ச்சுனர் ஆகியோரின் சிலைகள் உள்ளன. சொக்கநாதர் கருவறைக்கு வடக்கே கரியமாணிக்க பெருமாள் கோயில் இருந்ததாக ஒரு தகவல் உண்டு. அந்த கோயிலின் தூண்களாக இவை இருக்கக்கூடும் என ஒரு கருத்து நிலவுகிறது. நாயக்க மன்னர்கள் இங்கு ஆண்டுள்ளதால் அவர்களும் இதை நிறுவியிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு.

## நூற்றுக்கால் மண்டபம்:

இந்த மண்டபத்தில் நூறு தூண்கள் உள்ளன. நடராஜ பெருமான் இங்கு நடனம் ஆடுகிறார். தற்போது இந்த மண்டபம் தியான மண்டபமாக உள்ளது. சுவாமி சன்னதிக்கு வெளியே கொடிமரத்தின் அருகே அமைந்துள்ளது. 1526ல் சின்னப்ப நாயக்கர் இதை கட்டினார்.

புது மண்டபம்: கிழக்கு கோபுரத்தின் எதிரே உள்ள மண்டபத்தை "புது மண்டபம்' என்பர். இதன் உண்மை பெயர் "வசந்த மண்டபம்'. கோடைக்காலத்தில் இந்த மண்டபத்தின் இரு பக்கமும் உள்ள பள்ளங்களில் தண்ணீரை நிரப்புவர். அப்போது மண்டபத்திற்கு உள்ளே அமர்ந்திருப்பவர்களுக்கு குளிர்ச்சியான காற்று கிடைக்கும்.

அனேகமாக இந்த மண்டபம்தான் மீனாட்சி அம்மன் கோயிலில் கடைசியாக கட்டப்பட்டிருக்க வேண்டும். அதனால் "புது மண்டபம்' என்ற பெயர் உருவாகியிருக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. 133 அடி நீளமும் 105 அடி அகலமும் கொண்ட இந்த மண்டபம் 25 அடி உயரமுள்ள 500 தூண்களுடன் கட்டப் பட்டது. திருவிழா காலங்களில் இந்த மண்டபத்தில்தான் சுவாமி எழுந்தருளி இருக்கிறார்.

ராவண அனுக்ரஹ மூர்த்தி, திரிபுராந்தகர், காளி, கல்யாண சுந்தரேஸ்வரர், பிரம்மன், இந்திரன், அர்த்தநாரீஸ்வரர், ஊர்த்துவ தாண்டவர், சங்கரநாராயணர், அதிகார

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அனுபவம்!!

நந்தி, கருங்குருவிக்கு உபதேசித்த லீலை, கல்யானைக்கு கரும்புகொடுத்தது, பன்றிக்குட்டி களுக்கு பால் கொடுத்தது, புலியை மான்குட்டி களுக்கு பால்கொடுக்கச் செய்த லீலை, வியாக்ரபாதர், பதஞ்சலி, வாயற்காவலர்கள், தடாதகை பிராட்டி, சுந்தரேஸ்வரர், சந்திரன், சூரியன், ஏகபாதமூர்த்தி, கஜசம்ஹார மூர்த்தி, குதிரை வீரர்கள், யாழிகள், மனைவியருடன் திருமலை நாயக்கர் மற்றும் ஒன்பது நாயக்க மன்னர்களின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## கம்பத்தடி மண்டபம்

சுவாமி சன்னதியின் இரண்டாம் பிரகாரத்தில் உள்ள இந்த மண்டபத்தில் கயிலாசரூடர், சந்திரசேகர், இடபாந்திகர், லிங்கோத் பவர், சாமதகனர், நடராஜர், சுகாசனர், காலசம் ஹாரர், மார்க்கண்டேயர், சோமசுந்தரர், கலியாண சுந்தரர், திரிபுராந்தகர், சங்கர நாராயணர், அர்த்தநாரீஸ்வரர், இடபாரூடர், ஏகபாதமூர்த்தி, சக்ரதரர், சலநீதரானுக்கிரர், தட்சிணாமூர்த்தி, கஜசம்ஹாரர், சண்டே சானுக்கிரர், சோமசுந்தரர், கிராதர்ச்சுனர், உருத்திரர், பிட்சாடனர் ஆகியோ ருக்கு சிலைகள் உள்ளன.

## ஆயிரங்கால் மண்டபம்:

மீனாட்சி அம்மன் கோயிலில் ஆயிரங்கால் மண்டபம் மிகவும் சிறப்பு பெற்றது. தமிழகத்தில் திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர், திருவானைக்காவல், ஸ்ரீரங்கம், திருநெல்வேலி ஆகிய கோயில்களுடன் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலும் ஆயிரங்கால் மண்டபம் பெற்ற சிறப்புடையது.

நாயக்க மன்னர்களின் தளவாயாக இருந்த அரியநாத முதலியார் இந்த மண்டபத்தை அமைத்தார். தொன்மையான பொருட்களின் களஞ்சியமாக இந்த கலைக்கூடம் இருக்கிறது. கண்ணப்பர், அரிச்சந்திரன், குறவன், குறத்தி உருவச்சிலைகள், இசைத்தூண்கள், அன்னத்தின்மீது அமர்ந்த ரதி ஆகிய சிலைகள் குறிப்பிடத்தக்கது.

## புதுமண்டப சுருக்குப்பை ரகசியம்:

புதுமண்டபத்திலுள்ள தையல் கலைஞர்கள் ஒரு வழக்கத்தைப் பின்பற்றுகிறார்கள்.

அவர்கள் கிராமத்துப் பெண்மணிகளின் “மணிபர்ஸான’ சுருக்குப்பை தைக்கும் போது, பையினுள் சில்லரை காசு வைத்த பிறகு தான் தைக்க ஆரம்பிப்பார்கள். இப்படி ஒரு வித்தியாசமான தொழில் தர்மம்! இப்போதும், சில கடைகளில் மணிபர்ஸ் வாங்குபவர்களுக்கு காசுகளை உள்ளே வைத்துக் கொடுப்பதும் வழக்கமாக இருக்கிறது.

## பொற்றாமரைக்குளம்

கோயிலுக்குள் அமைந்துள்ள பொற்றாமரைக் குளத்தில் ஒரு காலத்தில் தங்கத்தாமரைகள் பூத்ததாகவும் இதைக்கொண்டு இந்திரன் சுந்தரேஸ்வரரை பூஜித்ததாகவும் சொல்வர். இதன் அகலம் 165 அடி. நீளம் 240 அடி. பரப்பரளவு ஒரு ஏக்கர். மீனாட்சிஅம்மன் கோயில் கட்டுவதற்கு முன்பே இந்த குளம் அமைந்துவிட்டது. சுந்தரேஸ்வரருக்கு கருவறை கட்டிய பாண்டியனின் உருவம் இந்த குளத்தின் வடகரையில் உள்ள தூணில் பொறிக்கப் பட்டுள்ளது. எனவே இந்த படித்துறை “பாண்டியன் படித்துறை’ எனப்படுகிறது. இந்த குளத்தில் தவளையும் மீனும் இருப்பதுஇல்லை. குளத்தின் தென்கிழக்கு மூலையிலிருந்து சுவாமி மற்றும் அம்மன் சன்னதிகளின் தங்க கோபுரங்களை வழிபடலாம்.

## மாதப்பெயரில் வீதிகள்:

மீனாட்சியம்மன் கோயிலுக்கு பிற கோயில் களில் இல்லாத ஒரு விசேஷம் உண்டு.அதாவது தமிழ் மாதங்களில் நடக்கும்விழாவின்போது, சுவாமி, அம்பாள் எந்த வீதிகளில் எழுந்தருளுகிறார் களோ அந்த வீதி, அம்மாதத்தின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. ஆடி, சித்திரை, ஆவணி, மாசி வீதி என கோயிலைச் சுற்றி நான்கு வீதிகள் இருக்கிறது.

இதில் ஆவணி வீதி மட்டும், மூல நட்சத் திரத்துடன் இணைந்து”ஆவணி மூல வீதி’ என அழைக்கப்படுகிறது. சிவனின் திரு விளை யாடல்களில் “பிட்டுக்கு மண் சுமந்த லீலை’ இம்மாதத்தில் நிகழ்ந்தது. எனவே, ஆவணி மூலம் நட்சத்திரத்தில் பிட்டுத்திருவிழா இங்கு விசேஷமாக நடக்கிறது.

## ஒரு நாள் மட்டும் யானை பவனி

மதுரை சொக்கநாதருக்கு பல வாகனங்கள் உள்ளன. ஆனால், வெள்ளி ஐராவத(யானை) வாகனம் மிகவும் விசேஷமானதாககருதப்படு கிறது. இந்த வாகனத்தில் திருக்கல்யாணத்தன்று மாலையில் மட்டும் எழுந்தருள்வார்.

## முதல் திருவிளையாடல்

மதுரையில் சிவபெருமான், அறுபத்து மூன்று திருவிளையாடல்கள் நிகழ்த்தினார். இதில் முதல் திருவிளையாடலாக இந்திரனுக்கு சாபவிமோசனம் கொடுத்த நிகழ்வு அமைந்தது. இந்த திருவிளையாடல் சித்ரா பவுர்ணமியின்போது நடக்கிறது. அன்று உச்சிக்காலத்தில் சிவன் சன்னதி எதிரில், இந்திரன் சிலையை வைத்து சிவனுக்கு தீபாராதனை செய்கின்றனர். இந்த பூஜையை இந்திரனே செய்வதாக ஐதீகம்.

## கடம்ப மரம்

மீனாட்சிஅம்மன் கோயில் தோன்றிய காலத்தில் கடம்ப மரங்கள் நிறைந்த வனமாக இருந்ததாக திருவிளையாடல் புராணம் கூறுகிறது. தனஞ்செயன் என்னும் வணிகன் கடம்பமரத்தின் அடியில் சொக்கநாதரைக் கண்டதாக ஸ்தல வரலாறு கூறுகிறது. சுவாமி சன்னதியில் உள்பிரகாரத்தில் துர்க்கை சன்னதியின் எதிரில் காய்ந்து போன நிலையில் மிகப்பழமையான கடம்ப மரம் ஒன்று இருக்கிறது. மேல கோபுரத்தில் நுழைந்தவுடன் இடதுபுறத்தில் ஒரு கடம்ப மரம் உள்ளது. நன்கு வளர்ந்து பருத்த மரமாக உள்ளது.

## தூணில் சரபேஸ்வரர்

இரணியனைக் கொன்ற நரசிம்மர் உக்கிர மூர்த்தியாகி இங்கும் அங்கும் அலைந்தார். அசுரனின் ரத்தம் நரசிம்மரை கோபத்திற்கு ஆளாக்கியது. ஆவேசத்தைத் தணிக்கும்படி தேவர்கள் சிவபெருமானை வேண்டினர். சிவபெருமான் மனிதன், மிருகம், பறவை என்ற அதிசய உருவெடுத்து வந்து நரசிம் மரை ஆலிங்கனம் செய்து (தழுவுதல்) சாந்தப் படுத்தினார். இச்சரபப்பெருமான் திருக்கல்யாண மண்டபத்திற்கு எதிரில் உள்ள தூணில் காட்சி தருகிறார். ராகுகாலத்தில் வழிபாடு செய்கின்றனர்.

## மாறும் ஆட்சிகள்:

ஒரு இல்லறம் நன்கு சிறக்க வேண்டுமானால் கணவனும் மனைவியும் இணைந்து செயல்படுவது அவசியம். அதை மெய்ப்பிக்கும் வகையில் மதுரையில் சுவாமி ஆட்சி ஆறு மாதங்களும், அம்மன் ஆட்சி ஆறு மாதங்களும் மாறி மாறி நடைபெற்று வந்தது. அக்காலத்தில் சித்திரை திருவிழா கிடையாது. மாசியில் தான்




விழா நடந்தது. இதை மெய்ப்பிக்கும் வகையில், இப்போதும் மாசி வீதியில் தான் சித்திரை திருவிழா பவனி நடக்கிறது.

திருமலை நாயக்க மன்னர், சைவ, வைணவ ஒற்றுமை கருதி அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சியையும், மீனாட்சி அம்மனின் மாசி திருவிழாவையும் சித்திரைக்கு மாற்றினார். விவசாயிகளின் ஓய்வுகாலம் கருதி சித்திரைக்கு விழாவை மாற்றியிருக்க வேண்டும். விழா மாற்றப்பட்ட பிறகு மீனாட்சியம்மனுக்கு சித்திரையிலும், சொக்கநாதருக்கு ஆவணியிலும் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது.

இதன் பிறகு அம்மன் சித்திரை முதல் 4 மாதமும், சுவாமி ஆவணி முதல் 8மாதங்களும் ஆட்சி புரிகின்றனர். மதுரையில் மீனாட்சிக்கே முக்கியத்துவம் என்றாலும், தன் கணவருக்கு ஆட்சிப்பொறுப்பை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று அவள் விரும்பியதால் எட்டு மாதங்களாக மாறியது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமோ!

## புதன் தலம்:

நவக்கிரகங்களில் இது புதனுக்குரிய தலமாகும். ஜாதகத்தில் புதன் தசை நடப்பவர்கள், இங்கு வேண்டிக்கொள்கிறார்கள். புதன் கிழமைகளில் காலை 6–7 மணிக்குள் சிவனுக்கும், அம்பிகைக்கும் பச்சை பட்டு வஸ்திரம் சாத்தி, பாசிப்பயிறு நைவேத்யம் படைத்து வழிபட்டால் கல்வியில் சிறப்பிடம் பெறலாம் என்பது நம்பிக்கை. கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களைக் கடைத்தேற்றும் கருணைக் கடலாக மீனாட்சி சுந்தரேஸ்வரர் திகழ்கின்றனர்.







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# மனதில் துவாரபாலகர்களை அமர்த்துவோம் இறைவன் அவனாக நம்மை நாடிவருவான்



**மனதை திறப்போம் மாயையை அழிப்போம்**

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இறை வனுக்கு சமமானவர்கள் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டோ மானால் மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வு, தீண் டாமை என்பது வெறும் வார்த் தையாகிப் போய் விடும்.

உண்மையில் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு காரண காரியத்திற்காகத்தான் பூமியில் பிறந்திருக்கிறார்கள், இன்னும் சொல்லப்போனால் நாம், நமக்கு கொடுத்த பணியை முடிக்க இந்த பூமியில் ஒரு விருந்தினராக வந்துள்ளோம் என் பதே உண்மை.

வெளியூருக்கு சென்றால் அந்த நாட்டிலோ, அந்தப் பகுதியிலோ சிறப்பு வாய்ந்த பல்வேறு பொருட்களை வாங்கிச் செல்வது வழக்கம், ஆனால் பூமிக்கு விசிட்டராக வந்த நாம் இரண்டு பொருள்களை மட்டுமே வாங்கிச் செல்ல முடியும், அதில் ஒன்று பாவம், இன்னொன்று புண்ணியம்.

மற்றபடி வந்த வேலை முடிந்துவிட்டால், எப்படி ஒன்றும் இல்லாமல் வந்தோமோ? அதேப் போன்று ஒன்றும் இல்லாமல் செல்வதைத் தவிர நம்மால் வேறு ஒன்றும் செய்ய முடியாது.

இந்த உண்மை தெரிந்தும் மனித மனமும், உடலும் சுகபோகத்திற்கு ஆசைப்பட்டு, நல்ல வழியோ தீய வழியோ எதைப்பற்றியும் கவலைப் படாமல் பல கோடி சேர்த்துவைப்பதை மட்டுமே குறிக்கோளாக ஏற்று ஒடி... திரிந்து, அலைந்து சொத்துக்களை குவித்து வருகிறது.

இறைவனைப் பற்றிய சிந்தனையையும்,

மனித சுய ஒழுக்கத்தையும் கழற்றி ஆணியில் மாட்டிவைத்துவிட்டு, இளமைக்காலம் முழுவதும் பணம் பொருளின் பின்னால் சென்று அலைந்து திரிகிறது.

எப்போது உடல் அளவிலும் மனஅளவிலும் சோர்வை சந்திக்கிறதோ அப்போது, சிந்திக்கத் தோன்றுகிறது.

இவ்வாறு சிந்திக்கும் மனநிலைக்கு வந்த பின்பு, தான் இளமைக்காலத்தில் ஆணியில் மாட்டிவைத்த இறைவனைப்பற்றிய சிந்த னையும், மனித சுய ஒழுக்கமும் ஞாபகத்திற்கு வந்து அவசர அவசர மாக அதை எடுத்து பயன்படுத்த தோன்றுகிறது.

ஆனால் காலன் என்பவனின் கணக்கு வேறாக இருந்தால் இத்த னைக்காலம் சுவற்றில் மாட்டியிருந்த இறை சிந்தனையும், சுய ஒழுக்கமும் அந்த மனித உடலுக்கு பயன்படுத்த முடியாத அளவாக சுருங்கிப் போய்விடுகிறது.

இதனால்தான் பணமிருந்தும் நிம்மதியில்லை, நாக்கு சுவையைத் தேடினாலும், உடல் மருந்தை நாடுகிறது, ஓட்டலையே வாங்கும் வசதி இருந் தாலும், வாய்க்கு ருசியானதை சாப்பிட வயிரும், உடலும் மறுப்பு தெரிவித்துவிடுகிறது.

இவை அனைத்தையும் முன்கூட்டியே அசைபோட்டு, நாம் ஏன் பிறந்தோம், எதை எடுத்துச் செல்லப்போகிறோம் என்பதைப்பற்றி யோசித்தாலோ போதும் உடலுடன் மனமும் இயற்கைக்கு கட்டுப்பட்டு மேல்நிலை அடையும் பாதையை நோக்கி பயணப்பட ஆரம்பித்துவிடும்.

யாரும் நேரிடையாக இறைவனை நோக்கி பயணப்பட்டுவிடமுடியாது என்பதை உணர்ந்ததால்தான் நம் முன்னோர்கள் கோவில் என்ற ஒன்றை அமைத்து அதில் ஒரு சிலையை வைத்து, அதற்கு சில ஆகமங்களை வைத்து, கொடிமரம், கோபுரம் அமைத்து, இதுதான் மனித உடல், என்று வழிவகுத்தனர், மனிதன் எப்போது தன் மனதிற்குள் உண்மையான கருப்பொருளை அடையாளம் காண்கிறானோ அப்போது அவன் ஒரு கும்பாபிஷேகம் கண்ட கோவிலுக்கு சமமானவன் என்ற கருத்தையும் பொதிந்து வைத்துள்ளனர்.


எப்போது ஒரு மனிதனுக்கு இறைவன் மீது பற்று வந்துவிடுகிறதோ... அப்போதே இறைவன் மனித மனதிற்கு துவாரபாலகர்களை அனுப்பி வைத்துவிடுவான், இந்த துவாரபாலகர்களின் பணி மிகச் சிறப்பானதாக இருக்கும்.

துவாரப்பாலகர் என்றால் வாயிற்காப் பாளர் என அர்த்தம் ஆகும். அந்தக் காலத்தில் அரசர்களுக்கு மெய்க்காப்பாளர்கள் இருந்ததைப் போலவும், தற்போது "Security" என்ற பெயரில் காவலர் இருப்பதைப்போல வும், கோயிலின்சாந்நித் தியத்தைக் காப்பாற்றுவதையே முதன்மையான கடமையாகக் கொண்டவர்கள் துவார பாலகர்கள்.

ஆண் தெய்வத்திற்கு ஆண் துவார பாலகர்களும், பெண் தெய் வத்திற்கு பெண் துவாரபாலகர்களும் இருப்பர்.

இந்த துவாரபாலகர்கள் சேவகர்கள், போர் வீரர்கள், அசுரர்கள் என பல்வேறு வடிவத்தில் இருப்பர். துவார என்பது "வாயில்" என்றும், பால என்பது "காப்போன்" என்றும் பொருள்படும்.

ஆண் தெய்வத்திற்கு ஆண் துவாரபாலகர் களும், பெண் தெய்வத்திற்கு பெண் துவாரபாலகர் களும் இருப்பர். இந்த துவாரபாலகர்கள் சேவ கர்கள், போர் வீரர்கள், அசுரர்கள் என பல்வேறு




வடிவத்தில் இருப்பர். துவார என்பது "வாயில்" என்றும், பால என்பது "காப்போன்" என்றும் பொருள்படும்.

சிவன் கோவிலில் இருப்பது சண்டி முண்டி, சண்டன் பிரசண் டன், திரிசூலநாதர் மழுவுடை யார் போன்ற ஐந்து இணை துவார பாலகர்கள் இருப்பர். சில கோவில் களில் நந்திதேவர் துவாரபாலகராக இருப்பார்.

விஷ்ணு கோவில்களில் ஜெயன் விஜயன் என இருவர் மட்டுமே இருப்பர்.

சக்தி கோவில்களில் அரபத்ரா, சுபத்ரா என இருவர் துவார பாலகிகளாக இருப்பர்.

கருவறையில் எழுந்தருளி யிருக்கும் இறைவன் அனைத்தும் அறிந்தவர். நம்முடைய முன்வினை கள் என்னென்ன, நாம் எதற்காக

www.aanmeegamalar.com







மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

வந்திருக்கிறோம் என்பதையெல்லாம் அறிந்து, முன்வினைகளுக்கு ஏற்ப சுகதுக்கங்களை அனுபவிக்கச் செய்து, நம்மைப் பக்குவப்படுத்தி, நிறைவாக இறைவனை அடைவதற்கு உரிய நிலையை நாம் பெறச் செய்யும் புனித இடம்தான் கோயில்.

எப்படி ஒரு சிசிடிவி கேமரா மூலம் அது பொருத்தப்பட்டிருக்கும் இடத்தில் நடக்கக்கூடிய காரியங்கள் பதிவு செய்யப் படுகின்றனவோ, அதே போன்று கோயிலில் நடைபெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளும், துவார பாலகர்களினால் கண்காணிக்கப்பட்டு, இறைவனிடம் தெரிவிக் கப்படுகின்றன.

துவாரபாலகர்களிடம் அனுமதி வாங்கிய பிறகே இறைவனை தரிசிக்க வேண்டும்.

கடவுள்களின் சிலாரூபத்துக்கு எந்தளவுக்கு மரியாதை செலுத்துகிறோமோ அந்தளவுக்கு துவாரபாலகருக்கும் மரியாதை செலுத்த வேண் டும்.

இதுதான் துவாரபாலகர்களின் பணி, இறைவன் மனித மனதிற்கு முதலில் துவார பாலகர்களை அனுப்புவதன் ரகசியமும் இதுதான், இறைவனே கதி என்று நாடும் ஒவ்வொரு வருக்கும் துவாரபாலகர்களைத்தான் மனித மனதிற்குள் குடிபுகுத்துவான் இறைவன், இவர் களின் பணி அந்த மனிதனின் செயல்பாடு களை கண்காணிக்கும்.

இறைசிந்தனையில் முழுவதுமாக சரணாகதி அடையும் நிலைக்கு மனிதன் செல்லும்போது மனித மனதிற்குள் இறைவன் ஆசனம் போட்டு அமர்ந்துவிடுவான்.

இவ்வாறு இறைவனுக்கு ஆசனம் தரும் அளவிற்கு நமது மனதை தயார் படுத்த வேண்டும். எண்ணற்ற சோதனைகள், அவப் பெயர்கள், வேதனைகள், மனதை தாக்கும் சூறாவளியாக வந்தாலும், கண்ணப்பரைப் போன்று, பட்டினத்தாரைப் போன்று அவற்றை எதிர்கொள்ளும் பக்குவத்தை தரும் ஒன்றுதான் தியானம்...

எப்போது நமது மனதிற்கு சாந்தத்தைத் தர தியானத்தை நாம் கையில் எடுக்கிறோமோ... அப்போதே நமது மனம் விழிப்படைய ஆரம்பித்து விடும்.

அவ்வாறு விழிப்படையும்போது மேற்கண்ட சுகபோகங்களைப் பற்றிய சிந்தனையை மனம் தன்னால் அசைபோட்டு ஆராய ஆரம்பித்து விடும்.

தியான நிலைகளில் பல கட்டங்களைக் கடக்கும்போது மனிதன் எளிமையை நாடுவான், கோடிகளின் மீது பற்று குறைய ஆரம்பிக்கும், உடல் சுகங்களை ஏற்க மறுக்கும்.

இறைவனை அடைய மனதை கட்டுப்படுத்துவது ஒன்றே வழி, ஆனால் அதற்கும் மனிதர்கள் சிரமப்படக் கூடாது என்பதற்கான வழிமுறைதான் இந்த தியானம், மனதை கட்டுப்படுத்தி உடலை கோவிலாக மாற்ற நினைக்கும் ஒவ்வொருவரும், ஆசை, பந்தம், பாசம், சொந்தம், சொத்து, மண், பொன், சுவை, சுகபோகம் போன்ற குப்பை களை களைய முற்பட்டாலே போதும், நாம் நமது உடல் என்ற கோவிலில் இறைவனை அமர்த்தி கும்பாபிஷேகம் செய்யும் வேலையில் இறங்கி விட்டோம் என்று பொருள்.

மனதை அடக்கி ஆள சரியான சாட்டை தியானம் மட்டுமே முடிந்த அளவு நாம் அதை கையில் எடுக்கும்போது, நமது குடும்பத்தில் உள்ள சிறு பிள்ளைகளின் கைகளிலும் அந்த தியானம் என்ற சாட்டையை அவசியம் கொடுக்க முயற்சிப்போம்.

உலகத்தில் வந்த வேலை முடிந்து நாம் செல் லும்போது, இவ்வுலகில் இருந்து புண்ணியம் என்ற பொருளை அதிகம் எடுத்துச்செல்ல முற் படுவோம்.

பாதையைதேடி.
போன்: 9444228203

www.aanmeegamalar.com

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

**UPI மற்றும் வங்கி**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**